Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 புரட்டாதி 24 செவ்வாய்க்கிழமை(10-10-2000) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:249

# பொதுத் தேர்தல் வாக்களிப்பு இன்று



யாழ்.நகரில் கே.கே.எஸ். வீதிப் பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற மோசமான விபத்தில் குடை சாய்ந்து கிடந்த லொறியைப் படத்தில் காணலாம். லொறிக்குள் நசியுண்டு இறந்தவர்களும் காயமடைந்தவர்களும் அவ்விடத்தில் இருந்து அகற்றப்பட்ட பின்னர் எடுக்கப்பட்ட படம்.

படம்:கொனிகா கலர் லாப்.

## நாளை அதிகாலை முதல் முடிவுகள் வெளியாகும்

கொழும்பு,ஒக்ரோபர்10

**இலங்கையின் பதினோராவது பொதுத் தேர்தல் வாக்களிப்பு இன்று நடைபெறுகிறது. யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம் உட்பட நாடுமுழுவதும் 9ஆயிரத்து 925 நிலையங்களில் வாக்களிப்பு நடைபெறும். மொத்தம் ஒரு கோடி 22 லட்சம் தகுதி பெற்ற வாக்காளர்கள் வாக்களிக்க உள்ளனர்.**

**உத்தியோகபூர்வ முடிவுகள் நாளை அதிகாலை முதல் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.**

நாடாளுமன்றத்துக்கு 196 உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்காக இன்று மக்கள் வாக்களிக்க உள்ளனர். 29அரசியல் கட்சிகளையும் 99 சுயேச்சைக் குழுக்களையும் சேர்ந்த 5 ஆயிரத்து 45 வேட்பாளர்களில் இருந்து புதிய நாடாளுமன்றத்துக்கு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

தேர்தல் வன்செயல்கள் மிகவும் அதிகரித்துள்ள பின்னணியில் நாட்டின் 22 தேர்தல் மாவட்டங்களிலும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்

(10ஆம் பக்கம் பார்க்க)

## வாக்களிப்பு முடிந்தவுடன் நாடு முழுவதும் ஊரடங்கு?

கொழும்பு,ஒக்.10

இன்று வாக்களிப்பு முடிந்தகையோடு நாடு முழுவதும் ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வாக்களிப்பின் பின் வன்முறைச் சம்பவங்கள் அதிகளவில் இடம்பெறும் பட்சத்தில் ஊரடங்குச் சட்டத்தை அமுல் செய்வதற்குப் பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. ஒரு லட்சம் ஊரடங்குச் சட்ட அனுமதிப்பத்திரங்களைத் தயார் செய்யுமாறு பாதுகாப்பு அமைச்சு பொலீஸ் திணைக்களத்திடம் ஏற்கனவே கேட்டிருந்தது.

இதற்கிணங்கத் தயாரிக்கப்பட்ட ஊரடங்கு அனுமதிப்பத்திரங்கள்

(10ஆம் பக்கம் பார்க்க)

## குழப்பம் விளைவிப்போரை கண்டதும் சுட உத்தரவு

கொழும்பு ஒக்.10

இன்று இடம்பெறும் தேர்தலைக் குழப்பும் வகையில் வன்முறைகளில் ஈடுபடுவோர் மற்றும் கள்ள வாக்குப் போட முனைவோரைக் கண்ட இடத்தில் சுடுமாறு பொலீஸாருக்குப் பதில் பொலீஸ்மா அதிபர் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த வாரங்களில் அதிகரித்த வன்செயல்கள் இன்று உச்சக்கட்டத்தை அடையலாம் எனப் பொலீஸார் எதிர்பார்ப்பதாகவும்

வன்செயல்களைத் தடுக்கும் பொருட்டு அவற்றில் ஈடுபடுவோரைக் கண்ட இடத்தில் சுடும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-3)

## 421 வாக்களிப்பு நிலையங்களில் இன்று இங்கு வாக்குப் பதிவு!

யாழ்ப்பாணம்,ஒக்.10

யாழ். மாவட்டத்தில் 421 வாக்களிப்பு நிலையங்களில் இன்று வாக்குப் பதிவு இடம்பெறவுள்ளது.

ஒன்பது உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக பதிவு செய்யப்பட்ட 5 லட்சத்து 71 ஆயிரத்து 486 வாக்காளர்கள் தமது வாக்குகளைச் செலுத்தவுள்ளனர். இத் தேர்தலில் யாழ். மாவட்டத்தில் 14 அரசியல் கட்சிகள் மற்றும் ஆறு சுயேச்சைக் குழுக்களைச் சேர்ந்த 240 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர்.

தேர்தலுக்கான வாக்குச் சீட்டுக்கள், தேர்தல் தொடர்பான ஆவணங்களை சிரேஷ்ட தலைமை அதிகாரிகள் நேற்று யாழ். செயலகத்தில் வைத்துப் பொறுப்பேற்று வாக்களிப்பு நிலையங்களுக்கு எடுத்துச் சென்றனர்.

(10ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். நகரில் நேற்று மாலை கோர விபத்து

## வீதியோர சுவரில் மோதி லொறி குடைசாய்ந்தது! பள்ளி அதிபர் உட்பட இருவர் நசியுண்டு பலி!!

யாழ்ப்பாணம்,ஒக்.10

யாழ். நகரப் பகுதியில் நேற்று மாலை 6.15 மணியளவில் இடம்பெற்ற கோரமான வீதி விபத்தொன்றில் அவ்வழியால் சென்ற இருவர் பரிதாபகரமாக உயிரிழந்தனர்; ஐவர் கடும் காயங்களுக்கு உள்ளாகினர்.

யாழ். நகரில் இருந்து காங்கேசன்துறை வீதி வழியாக வேகமாகச் சென்று கொண்டிருந்த லொறி ஒன்று காங்கேசன்துறை வீதியில் - வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்துக்கு அருகில் - மின்சார சபை தலைமையகம் முன்பாகச் சுவருடன் மோதித் தடம் புரண்டது. அச்சமயம் வீதியில் சென்று கொண்டிருந்தோரில் ஐவர் அதற்குள் அகப்பட்டு நசியுண்டனர். அவர்களில் இருவர் உடலின் சில பகுதிகள் சிதைவுண்ட நிலையில் உயிரிழந்தனர். மற்றும் மூவர் காயங்களுடன் மீட்கப்பட்டு யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

லொறிச் சாரதியுடன் கூட இருந்த இருவர் அதற்குள் அகப்பட்ட நிலையில் காயமுற்றனர். சாரதி சிறு காயங்களுடன் தப்பினார்.

இரு பிள்ளைகளின் தந்தையான வண்ணை நாவலர் மகாவித்தியாலய அதிபர் ஐ.துரைராஜா (வயது 57) மற்றும் ஒலிபரப்பு நிலையம் ஒன்றில் பணிபுரியும் இரண்டு பிள்ளைகளின் தந்தையான யோகநாதன் கியூபேட்(வயது29)ஆகியோரே உயிரிழந்தவர்களாவர். பிரஸ்தாப பாடசாலை அதிபர் சம்பவம் நடந்த இடத்திலேயே உயிரிழந்தார். மற்றைய இளைஞர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிலநிமிட நேரத்தின் பின் உயிரிழந்தார்.

விபத்துக்குள்ளான லொறியில்

(10ஆம் பக்கம் பார்க்க)

### பாடசாலைகளுக்கு மாணவர்கள் வரவில்லை

யாழ்ப்பாணம்,ஒக்.10

நகரிலும் நகரை அண்டிய பகுதிகளிலும் உள்ள பாடசாலைகளில் மாணவர் வரவு நேற்று மிகவும் குறைந்து காணப்பட்டது.சில பாடசாலைகள் நேரகாலத்துடன் மூடப்பட்டன.

தேர்தலை ஒட்டி விடுமுறை வழங்கப்படுமா இல்லையா என்பது தெரியாத நிலையில் மாணவர்களும், பெற்றோரும் காணப்பட்டனர்.

பாடசாலைகள் மூடப்படுவது பற்றிய உத்தியோக பூர்வ அறிவித்தல் எதுவும் யாழ்.மாவட்டக்கல்வி அலுவலகங்களால் விடுக்கப்படவில்லை எனத் தெரிய வந்தது. (ஐ-5-7-9)

### நகரில் நேற்று அமைதி

யாழ்ப்பாணம், ஒக்.10

கட்சிகள் மற்றும் குழுக்களின் பிரசார நடவடிக்கைகளால் கடந்த சில நாள்களாக சத்தமும் சந்தடியுமாகக் காணப்பட்ட யாழ். நகரப் பகுதியில் நேற்று அமைதி நிலவியது.

வர்த்தக நிலையங்கள் மற்றும் நிறுவனங்கள் இயங்கிய போதும் பொதுமக்களின் நடமாட்டம் வெகுவாகக் குறைந்து காணப்பட்டது.பஸ் சேவைகள் மட்டுப்படுத்தப்பட்டிருந்ததால் நகருக்கு வந்த பலரும் நேரத்துடனேயே திரும்பிச் சென்றதைக் காணமுடிந்தது(ஐ-15-17-173)

### மதுபானங்கள் புலிகளால் அழிப்பு

மட்டக்களப்பு,ஒக்.10

தேர்தல் தினமான இன்று தமது ஆதரவாளர்கள் எனக் கூறப்படும் சிலருக்கு வழங்கவென மட்டக்களப்பின் இராணுவக் கட்டுப்பாட்டற்ற பகுதிக்கு தமிழ்க் கட்சி ஒன்றின் உறுப்பினர்களால் எடுத்துச் செல்லப்பட்ட பொதி செய்யப்பட்ட மதுபான வகை

(10ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பிலும் ஏனைய இடங்களிலும் அத்தியாவசியப் பொருள்களை வாங்க மக்கள் முண்டியடிப்பு!

கொழும்பு,ஒக்.10

தலைநகர் கொழும்பிலும் நாட்டின் முக்கிய நகரங்களிலும் நேற்று அத்தியாவசியப் பொருள்களைக் கொள்வனவு செய்வதில் பொது மக்கள் மும்முரமாக ஈடுபட்டிருந்ததாகச் செய்திகள் தெரிவித்தன.

வாக்களிப்பைத் தொடர்ந்து தொடர்ச்சியாக ஊரடங்குச்சட்டம் அமுல் செய்யப்படலாம் என எதிர்பார்த்தே மக்கள் பொருள்களை வாங்க முண்டியடித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு நகரில் சில்லறைப் பொருள்களை விற்பனை செய்யும்

(10ஆம் பக்கம் பார்க்க)

## வழமையான சேவைகளில் பஸ்கள் இன்று ஈடுபடமாட்டா!

யாழ்ப்பாணம்,ஒக்.10

பொதுத் தேர்தலை முன்னிட்டு வடபிராந்திய போக்குவரத்துச்சபை பஸ்கள் அனைத்தும் தேர்தலுக்கான விசேட சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளமையால், அவை வழமையான போக்குவரத்துச்சேவையில் இன்று ஈடுபடமாட்டா என்று பொது முகாமையாளர் வி.எஸ்.சொக்கலிங்கம் தெரிவித்தார்.

தேர்தல் கடமைகளுக்கென தென்பகுதியிலிருந்து பஸ்கள் எவையும் இங்கு அனுப்பி வைக்கப்படாமையினால் வட பிராந்திய போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான 85 பஸ்களும் தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

(10ஆம் பக்கம் பார்க்க)

## கிளாலிப் படைத்தளம் மீது புலிகள் பெரும் தாக்குதல்!

### முறியடித்ததாக படையினர் அறிவிப்பு

கொழும்பு,ஒக்.10

கிளாலிப்படைத்தளம் மீது நேற்று அதிகாலை 5.15 மணியளவில் பெரும் தாக்குதல் ஒன்றை விடுதலைப் புலிகள் மேற்கொண்டதாக பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இந்தத் தாக்குதல் குறித்து நேற்று மாலை 6.15 மணிக்கு அது விடுத்த அறிக்கையில் -

கிளாலிப்படைத்தளத்தின் முன்னரங்க நிலைகள் மீது விடுதலைப் புலிகள் ஆட்லறி மோட்டார் மற்றும் இயந்திரத் துப்பாக்கிகள் கொண்டு பெரும் தாக்குதல் ஒன்றை மேற்கொண்டனர். ஆரம்பத்தில் விடுதலைப் புலிகள் அந்தப் பகுதியில்

(10ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# யா/ இணுவில் இந்துக் கல்லூரி

*தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை பாராட்டி வாழ்த்துகிறோம்.*

| | |
|---|---|
| செல்வன் பா.திருக்குமரன் | - 149 |
| செல்வி ச.விதுஷா | - 146 |
| செல்வன் கு.கஜதீபன் | - 144 |
| செல்வி ம.சங்கீதா | - 141 |
| செல்வி இ.திவாஜினி | - 138 |
| செல்வன் கு.சுகிர்தன் | - 134 |

மேற்படி மாணவர்களின் வெற்றிக்குக் காரணமாக இருந்த அதிபர், பாடசாலையின் அனைத்து ஆசிரியர்களையும் இறையருளால் சகல சௌபாக்கியங்களும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்க வென வாழ்த்துகின்றோம்.

பெற்றோர், நம்பிக்கை நிதியத்தினர்
பழைய மாணவர் சங்கம்
(C/13323) யா/இணுவில் இந்துக் கல்லூரி.


## கண் சிகிச்சை முகாம்

கோண்டாவில்,ஒக்.10

உலகக் கண் பார்வை தினத்தை முன்னிட்டு நாளை மறுதினம் 12 ஆம் திகதி வியாழக்கிழமை கோண்டாவில் மகாவித்தியாலயத்தில் இலவச கண் சிகிச்சை முகாம் நடைபெறவுள்ளது.

மானிப்பாய், இணுவில், சுன்னாகம், கொக்குவில், சாவகச்சேரி ஆகிய பகுதிகளில் லயன்ஸ் கழகங்கள் இணைந்து நடத்தும் இந்த சிகிச்சை முகாமில் பிரபல கண் சத்திர சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி எஸ்.குகதாசன் கண் பரிசோதனைகளை மேற்கொள்வார். பரிசோதனைகள் குறிப்பிட்ட தினத்தன்று காலை 7.30 மணியளவில் ஆரம்பமாகின்றன.

கண்பரிசோதனைகளின் முடிவில், சத்திரசிகிச்சை தேவைப்பட்டால் யாழ்.போதனா வைத்திய சாலையில் சிகிச்சை பெற ஒழுங்குகள் செய்யப்படும் என்றும் -

வசதியற்றவர்களுக்கு கண்ணாடி வில்லைகள் வழங்கப்படும் என்றும் - சிகிச்சை முகாம் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.(இ-ஒ)

## கிரனேட் வீச்சில் குழந்தை பலி

துன்கிரிய பிரதேச செயலர் தண்டக விதானகேயின் இல்லத்தின் மீது நேற்று அதிகாலை இனந்தெரியாதோர் மேற்கொண்ட கிரனேட் தாக்குதலில் அவரது 6 மாதக் குழந்தை பலியானது. மனைவி படுகாயமடைந்தார். (ஜ-8)


# பாராட்டி வாழ்த்துகின்றேன்

எம் அன்புக்குரிய இலங்கை வங்கி யாழ். பிரதேச
முகாமையாளர்
உயர்திரு

## கணபதிப்பிள்ளை பாலசுப்பிரமணியம்

அவர்கள் வடபிராந்தியச் செயற்பாட்டு முகாமையாளராகப் பதவி உயர்வு பெற்றுள்ளமையையிட்டு மனதார வாழ்த்துவதுடன், அவர் மென்மேலும் வங்கித்துறையில் பதவி உயர்வு பெற்றுவாழ இறைவனை இறைஞ்சுகின்றேன்.

லயன் வி. எஸ். சிவரத்தினம், ஜே. பி.
*விலை மதிப்பீட்டுத் திணைக்களம்.*
*இல.24, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.* *யாழ்ப்பாணம்.*
(79280)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

| | | |
|---|---|---|
| 1. த.பிரியந்தி | - | 162 |
| 2. பூ.நிதர்சன் | - | 151 |
| 3. நி.நிரோஜ்ஜன் | - | 138 |
| 4. ப.யோகிஷன் | - | 135 |

2000 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

*அதிபர், ஆசிரியர்கள்,*
*பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,*
*பழைய மாணவர் சங்கம்.*
யா/மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம்.
(79306)

# பட்டமளிப்பு விழா வாழ்த்துக்கள்

06-10-2000 அன்று யாழ். பல்கலைக்கழகத்தில்
வணிகமாணிப் பட்டம் பெற்ற
*காரைநகர்*
சிவலிங்கம் துவராஜா (தவா)
*அவர்களைப் பாராட்டுகின்றோம்.*

- விக்னேஸ்வரன் குடும்பத்தினர்.
*84/2 அரசடி றோட், யாழ்ப்பாணம்.* (79314)

# ராஜா
(யாழ்ப்பாணம்)

விஜய், ஜோதிகா
மற்றும் பலரின் நடிப்பில்

## குஷி

காட்சிகள்: 10.30,2.00(பு.நே)
(C/13207)

# விசேட அபிஷேகம்

காரைநகர் மணற்காடு கும்பநாயகி அம்மன் ஆலயம் மற்றும் ஈழத்துச் சிதம்பரம் ஆகிய ஆலயங்களில் இன்று (10.10.2000) காலை 10 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனைகள் மற்றும் அன்னதானம் என்பன இடம்பெறவுள்ளன.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உபயகாரர்,
யாழ்ப்பாணம். (C/13329) மகாலட்சுமி ஸ்ரோர்.

# கண்ணீர் அஞ்சலி

விநாசித்தம்பி முருகேசு
கல்வியங்காடு
சண்ரெக் தொலைத்தொடர்பு நிறுவன உரிமையாளர்
மு.கணேஸ்

அவர்களின் தந்தையார்

## விநாசித்தம்பி முருகேசு

நேற்றுக் காலமானார். அவருக்கு எங்கள் கண்ணீர் அஞ்சலிகள். அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

- கல்வியங்காடு வர்த்தகர்கள்.
(C/13327)

# நாகம்ஸ்
சுன்னாகம்

பிரசாந்த், ரம்பா
லிவிங்ஸ்டன், ராதாரவி
நடித்த

## பூமகள் ஊர்வலம்

(ரீ.ஸ்)
காட்சிகள்: 11.00,2.30 (பு.நே)
(79286)

# அவசர கலந்துரையாடல்

யாழ்.பல்கலைக்கழக இறுதிவருட (நடனம்/வாய்ப்பாட்டு) மாணவர்கள் அனைவரும் 12.10.2000 வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு கீழ்க் காணும் விலாசத்தில் தவறாது சமுகம் தரவும்.

செல்வி.றே.மருதவாணர்
415,கோயில் வீதி,
(79334) நல்லூர்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலி
10-10-2000

| மலர்வு: | மறைவு: |
|---|---|
| 30 - 08 - 1928 | 10 - 09 - 2000 |



அமரர்

## தமியாம்பிள்ளை மனுவேற்பிள்ளை
(உரும்பிராய்)

"இயேசுவின் ஒன்றிப்பில் இறந்தோரை கடவுள் அவருடன் அழைத்து வருவார்"
(1 தெச. 4:14)

செபம்

எல்லாம் வல்ல அன்புத் தெய்வமே இறைவா! நீர் உம்மிடம் அழைத்துக் கொண்ட எமது அன்புத் தந்தை ஊடாக நீர் எமக்கு பொழிந்துள்ள ஒவ்வொரு நன்மைகளுக்காகவும் உமக்கு நன்றி கூறுகின்றோம்.

இவரின் இவ்வுலக வாழ்வில் தெரிந்தும் தெரியாமலும் தமது மனித பலவீனத்தினால் செய்த எல்லாவிதமான பாவங்களையும் மன்னித்து இவரை உமது திருமுக ஒளியினுள் ஏற்றருள வேண்டும் என்று உம் திருமகனும் எம் ஆண்டவருமான கிறிஸ்து மூலமாக இரந்து மன்றாடுகிறோம். ஆமென்.

இவரது பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
சகோதரர்,பேரப்பிள்ளைகள்.

*அலுமினியத் தொழிற்சாலை அருகில்,*
*உரும்பிராய் கிழக்கு,*
*உரும்பிராய்.*
(79333)

# உலக (கண்) பார்வை தினம் - 12.10.2000

We Serve

இத்தினத்தை அனுஷ்டித்து
மானிப்பாய் வட்டம், இணுவில், சுன்னாகம், கொக்குவில், சாவகச்சேரி
லயன்ஸ் கழகங்கள் இணைந்து நடத்தும்
விழிவெண்படலத்தால் பாதிப்புற்றோருக்கான

## இலவச கண் பரிசோதனை முகாம்

காலம்: 12.10.2000 ( வியாழக்கிழமை - போயா) காலை 7.30 மணி
இடம்: கோண்டாவில் மகாவித்தியாலயம்
புகையிரத நிலைய வீதி, கோண்டாவில்.

கண்பரிசோதனை மேற்கொள்பவர்:-
யாழ்.போதனா வைத்தியசாலை - கண் சத்திர சிகிச்சை நிபுணர்
வைத்திய கலாநிதி எஸ்.குகதாசன் அவர்கள்

முதியோருக்கும் இடம்பெயர்ந்துள்ளோருக்கும் முன்னுரிமை வழங்கப்படும். ஏனையோருக்கு முகாமிற்கு வருகை தரும் ஒழுங்கின் படி பார்வையிடப்படும்.

குறிப்பு: கண் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்படவேண்டியவர்களுக்கு யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதி பெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. அத்துடன் வசதியற்றோருக்கு மட்டும் கண்ணாடி வில்லை தேவைப்படின் வழங்கப்படும்.

சேவை ஒழுங்கு :- லயன் எஸ்.எஸ்.தங்கராஜா
மாவட்டத்தலைவர் - கழக விருத்தி

*அன்பளிப்பு:-*

## கணேசன் ஸ்ரோர்ஸ்

26, கே.கே.எஸ். வீதி.
யாழ்ப்பாணம். (C/13318)

## உதயன்

### இன்று தேர்தல்

இன்றைய பொதுத் தேர்தல் நாடளாவிய ரீதியில் நடைபெறுகிறது. தென்னிலங்கைத் தேர்தல் குறித்து நேற்று இப்பத்தியில் எழுதினோம். இன்று தமிழ்ப் பகுதிகளில் வடக்கு - கிழக்குப் பிரதேசத்தில் - நடைபெறும் தேர்தல் குறித்துப் பார்ப்பது பொருத்தமானதாகும்.

தமக்குரிய அரசியல் உரிமைகள் இன்னும் கிடைக்கவில்லை என்பது அனேகமாக எல்லாத் தமிழ் மக்களாலும் ஏற்றுக்கொள்ளப்படும் ஒன்று. பூரண அரசியல் சுதந்திரம் கைக்கு வராததன் விளைவுகளை நாளாந்தம் அனுபவித்து வருபவர்களும் அவர்களே.

நாடாளுமன்ற அரசியல் மூலம் தங்களுக்குச் சேரவேண்டிய உரிமைகளைப் பெறுவதற்குக் கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக எடுத்துக் கொண்ட முயற்சிகள் - ஜனநாயக வழிப் போராட்டங்கள் - யாவுமே பயனற்றுப் போனமையும் தமிழர்கள் கண்ட அனுபவம்.

இந்த அனுபவத்தின் பின்னரும் உரத்துக் குரல் எழுப்பினாலும் எதையுமே பெற முடியாது. கடந்த ஓகஸ்ட் மாதம் 8ஆம் திகதி வரை கண்ட பின்னரும் நாடாளுமன்ற ஆசனங்களில் தமது பிரதிநிதிகளை அமர்த்துவதன் மூலம் உரிமைகளைப் பெறமுடியும் என்ற நம்பிக்கையை தமிழ் மக்கள் முற்றாக இழந்துவிட்டனர்.

சிறிய விடயத்தில் கூட - ஆலய நிர்வாகத்தில் கூட - ஒற்றுமையாகச் சேர்ந்து உழைக்கும் நல்லியல்பு எள்ளளவும் இல்லாத தன்மையினர் தமிழர்கள். அதனால் நாடாளுமன்றத்தின் ஊடாக எதனையோ பெரிதாகச் சாதித்துவிடப் போவதாகக் கூறிக் கொண்டு அந்தப் பக்கமாகச் சாய்ந்து - சார்ந்து - நிற்பவர்களும் எம்மிடையே உள்ளனர்.

அவர்களே வடக்கு - கிழக்கில் இன்றைய தேர்தலில் போட்டியிடுகிறார்கள். அது தமக்குள்ள உரிமை என்று அவர்கள் கூறுகிறார்கள். உண்மை; மறுக்க முடியாதது.

தமிழ் மக்களின் உரிமைகள் வழங்கப்படவில்லை; வெளி உலகுக்குத் தெரியாதவாறு அவர்கள் அடக்கி ஒடுக்கப்படுகிறார்கள்; என்பதனை தேர்தலில் தமிழர்கள் எவருமே போட்டியிடாமல் உலக மக்களுக்கு வெளிப்படுத்தி இருக்கலாம்.

அது நடைபெறாவிட்டாலும் எல்லோரும் ஒரே அணியில் நின்று வடக்கு - கிழக்கில் போட்டியிட்டு சர்வதேச உலகத்துக்கு தமிழர்கள் இரண்டாந்தரப் பிரஜைகளாக நடத்தப்படுகிறார்கள் என்று எழுத்து வடிவிலன்றி செயல்மூலம் நிருபித்துக் காட்டியிருக்கலாம்.

அதுவும் நடைபெறவில்லை. பல நூறு பிரிவுகளாகக் கன்னை பிரிந்து நின்று தமிழ் அரசியல்வாதிகள் வடக்கு - கிழக்கில் போட்டியிடுகிறார்கள்; வேதனைக்குரியது.

யாழ்ப்பாணக் குடாநாட்டுத் தேர்தலோ கேலிக்குரிய ஒன்றாக மாறியுள்ளது. பதினான்கு அரசியல் கட்சிகளும் ஆறு சுயேச்சை அணிகளும் தேர்தல் களத்தில் மோதின; முடிவு என்னவாகும் என்று மூக்கின் மேல் விரல் வைத்து வேட்பாளர்கள் நாளை யோசிப்பார்கள்!

இங்கு நடைபெறும் தேர்தலின் முடிவுகள் எவ்வாறு அமையும் என்று எதிர்வு கூறமுடியாத நிலை. மக்கள் தேர்தலில் பெரிதாக நாட்டம் காட்டவில்லை. போர்ச்சூழ்நிலையும், வாக்குப் போட்டு எதனைக் கண்டோம் என்ற விரக்தியும் அதற்கான பிரதான காரணங்கள்.

தேர்தல் அமைதியாக நடைபெறுமா? அசம்பாவிதங்களில் ஏன் வீணாகச் சிக்கிக் கொள்ள வேண்டும் என்ற அச்ச நிலையும் மக்களிடம் காணப்படுகிறது.

தாங்கள் ஜனநாயகக் கடமையைச் செய்வதா இல்லையா என்பதனை நேற்றுவரை முடிவு செய்யாத வாக்காளப் பெருமக்களே அனேகர். அவர்கள் எந்த அணிக்கு வாக்குத் தரப்போகிறார்கள் என்பதனை அறிவதற்கான "அசுமாத்தத்தை"த் தானும் காண முடியவில்லை!

தேர்தல் தமிழ்மக்கள் மீது திணிக்கப்பட்டுள்ளது என்பது உண்மையே. தேர்தலில் கலந்து கொண்டு வாக்களிக்க வேண்டிய சூழல் உருவாக்கப்பட்டுள்ளது என்பது தளநிலைமையாகி உள்ளது.

அதனால் வாக்களிப்பு நிலையத்துக்குச் செல்ல வேண்டிய தேவையும் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

அங்கு சென்று என்ன செய்வது என்பதனை வாக்காளர்களே தீர்மானிக்கவும் உள்ளனர்.

# வாக்களிப்பில் மோசடி இடம்பெற்றால் யூகோ. போன்ற நிலைமை இங்கும் ஏற்படும்

## ரணில் விக்கிரமசிங்க எச்சரிக்கை

இன்று நடைபெறும் நடாளுமன்றத் தேர்தலுக்கான வாக்களிப்பில் மோசடிகளில் ஈடுபட அரசாங்கம் முயற்சித்தால், யூகோஸ்லாவியாவில் எதிர்க்கட்சிகள் மேற்கொண்ட ஆர்ப்பாட்டங்களால் அதிபர் மிலோசேவிக் பதவி விலகி கொஸ்டுனிகா பதவி ஏற்றது போன்ற நிலை இலங்கையில் ஏற்படும்.

மேற்கண்டவாறு ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க எச்சரித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

எதிர்வரும் தேர்தலில் 113 ஆசனங்களைப் பெற்று ஐ.தே.க. ஆட்சி அமைக்கும். ஐ.தே.க. ஆட்சி அமைப்பதை ஜனாதிபதி சந்திரிகா தடுக்க முற்பட்டால் கடுமையான எதிர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் - என்றார்.

இதேசமயம் - தமது ஆதரவாளர்களை வாக்களிப்பு நிலையங்களுக்குச் செல்லவிடாமல் தடுக்கும் நடவடிக்கைகளில் அரசு ஈடுபடக் கூடும் என்றும் அவ்வாறு ஏதாவது முறைகேடுகள் இடம்பெற்றால் முன் எப்போதும் நடைபெற்றிராத வகையில் போராட்டங்கள் நடத்தப்படும் என்றும் -

ஜே.வி.பி. பேச்சாளர் விமல் வீரவன்சா தெரிவித்துள்ளார். (இ-ஒ)



அகில இலங்கை அரசசேவை சித்த ஆயுர்வேத வைத்திய அதிகாரிகள் சங்கம் அண்மையில் 'சித்த மருத்துவ முறையியல்' என்னும் நூலை வெளியிட்டது. பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை நூலை வெளியிட்டு வைத்து உரையாற்றுவதையும் -

இந்து நாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ணஐயர் நூலை வெளியிட்டு வைப்பதையும் - படங்களில் காணலாம்.

படம்:நெடுந்தீவுசெய்தியாளர்.

### தலைமைத்துவ பயிற்சி வகுப்பு

சண்டிலிப்பாய்,ஒக்.10

வலிகாமம் மேற்கு பிரதேச செயலகப் பிரிவிலுள்ள கிராம அபிவிருத்தி சங்கங்கள், மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்கள் ஆகியவற்றின் உறுப்பினர்களுக்கான தலைமைத்துவ பயிற்சி வகுப்பு இம்மாத இறுதியில் நடைபெறவுள்ளது.

கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் அனுசரணையுடன் இப்பயிற்சி வகுப்பு நடத்தப்படவுள்ளதாகவும், இப்பயிற்சியை சிறப்பான முறையில் நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் வலிகாமம் மேற்கு கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் தா.தியாகமூர்த்தி தெரிவித்தார்.

(இ-135)

### தபால் பொதிகள் இன்று வரும்

யாழ்ப்பாணம்,ஒக்.10

பருத்தித்துறைக்கு இன்று வரவுள்ள செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பலில் குடாநாட்டுக்கான வெளியூர்த் தபால்கள் அடங்கிய 204 தபால் பொதிகள் எடுத்து வரப்படவுள்ளன.

கொழும்பில் இருந்து திருமலைக்குத் தபால் பொதிகள் அனுப்பி வைக்கப்படாத காரணத்தினாலேயே இந்தத் தடவை குறைந்த எண்ணிக்கையான பொதிகள் எடுத்து வரப்படுவதாக தபால் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஐ-10)

### பொங்கல் விழா

யாழ்ப்பாணம்,ஒக்.10

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீவல்லிபுரநாதர் தேவஸ்தானம் ஆஞ்சநேயர் பொங்கல் விழா இன்று நடைபெறும்.

பொங்கல் விழா நிகழ்வினை அடுத்து நாளை காலை 10 மணிக்கு பிராயச்சித்த அபிசேகமும் வாகனப் பூசையும் இடம்பெறும். (இ-15)

## இராணுவ உயர்அதிகாரிகளின் மனிதாபிமான உதவி

யாழ்ப்பாணம்,ஒக்.10

இனந்தெரியாதபொருள் ஒன்றை விழுங்கி, அது மார்ப்புப் பகுதியில் சிக்குண்டு உயிருக்காகப் போராடிக் கொண்டிருக்கும் ஒரு வயதுக் குழந்தை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் இருந்து கொழும்பு தேசிய ஆஸ்பத்திரியில் அவசரமாக ஒரு சில மணி நேரத்தில் அனுமதிக்கப்பட்டது.

பலாலியில் விடுதலைப் புலிகளின் ஷெல்கள் அடிக்கடி வீழ்வதால் இராணுவத்தினரின் விமான சேவை மட்டுப்படுத்தப்பட்ட சூழ்நிலையிலும், நோயாளியான ஒரு வயதுக் குழந்தையும், தாயும் அவசரமாக விமானம் மூலம் கொழும்புக்கு அனுப்பப்பட்டனர்.

அவர்கள் இருவரும் இரத்மலானையில் இறங்கியவுடன் இராணுவ அம்புலன்ஸ் வாகனத்தில் உடனடியாக கொழும்பு தேசிய ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கு அனுமதிக்கப்பட்டனர்.

உடுப்பிட்டி தெற்கு, வீரபத்திரர் கோவிலடியைச் சேர்ந்த அருள்தாஸ் விதூஷன் அவரது தாயார் அருள்தாஸ் சமேஸ்வரி ஆகிய இருவரையும் இக்கட்டான சூழ் நிலையிலும் இராணுவ உயர் அதிகாரிகள் மனிதாபிமான உதவியாகக் கொழும்புக்கு அனுப்பி வைத்தமையை யாழ். ஆஸ்பத்திரி வட்டாரங்கள் வரவேற்றுக் கருத்துத் தெரிவித்தன.

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் பொதுச் சிகிச்சைக்கான வைத்திய நிபுணரும், காது - மூக்கு - தொண்டை சிகிச்சைக்கான வைத்திய நிபுணரும் சேவையில் இருந்த போதிலும் மார்ப்புப் பகுதி வைத்திய நிபுணர் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## லொறியில் சிலிண்டர் ஏற்றிய ஊழியர் நசிந்து காயம்

சிலிண்டர்கள் ஏற்றிக் கொண்டிருந்த லொறி திடீரென பின்னுக்கு வந்ததால் சிலிண்டர் ஏற்றிக் கொண்டிருந்த ஊழியர் இரு வாகனங்களுக்கிடையில் அகப்பட்டு படுகாயமடைந்தார். இந்தச் சம்பவம் கடந்த புதன்கிழமை யாழ். போதனா வைத்தியசாலையில் இடம்பெற்றது.

யாழ். சுகாதார சேவைகள் மாகாண பிரதிப் பணிப்பாளர் பணிமனையில் கடமையாற்றும் சாவகச்சேரி கச்சாய் வீதியைச் சேர்ந்த மனுவேற்பிள்ளை நல்லையா (வயது 36) என்பவரே படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கப்பலில் ஏற்றி கொழும்புக்கு அனுப்புவதற்காக ஆஸ்பத்திரிக்குச் சொந்தமான சிலிண்டர்கள் லொறியில் ஏற்றப்பட்ட சமயமே இந்த விபத்து நிகழ்ந்தது.

(இ-117)

## நல்லெண்ணெய் உற்பத்திக்கு திணைக்களம் ரூ.50,000 உதவி

சண்டிலிப்பாய்,ஒக்.10

சங்கானை மேற்கு கிராம அபிவிருத்தி சங்கம் ஆரம்பிக்க விருக்கும் நல்லெண்ணெய் உற்பத்தி தொழிற்சாலை திருகோணமலையிலுள்ள வடக்கு - கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களம் 50 ஆயிரம் ரூபாவை வழங்கியுள்ளது.

விரைவில் இந்தச் சங்கம் நல்லெண்ணெய் உற்பத்தியை ஆரம்பிக்க விருப்பதாக வலிகாமம் மேற்கு பிரிவு கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் தா.தியாகமூர்த்தி தெரிவித்தார்.

சண்டிலிப்பாய் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள பிரான்பற்று கிராம அபிவிருத்தி சங்கத்தினால் ஆரம்பிக்கப்படவிருக்கும் நல்லெண்ணெய் உற்பத்தித் தொழிற்சாலைக்கும் வடக்கு - கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களம் 50 ஆயிரம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது தெரிந்ததே. (இ-135)

## பாணின் நிறை குறித்து செயலகத்துக்கு முறையீடு

யாழ்ப்பாணம்,ஒக்.10

பாணின் நிறை 450 கிராமாக அதிகரிக்கப்பட்டுள்ள போதிலும் சில இடங்களில் 350 கிராம் பாணே விற்பனை செய்யப்படுவதாக யாழ். செயலகத்தில் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த முறைப்பாடுகளை அடுத்து பாணின் நிறை, தரம், விலை போன்றவற்றை பரிசோதனை செய்யுமாறு உணவுக்கட்டுப்பாட்டுத் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளினால் பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கத்தின் அனுசரணையுடன் கடந்த முதலாம் திகதி முதல் பாணின் நிறை 450 கிராமாகவும் விலை 10 ரூபாவாகவும் நிர்ணயம் செய்யப்பட்டு இந்த நிறையும் விலையும் அமுல் செய்யப்பட்டுள்ளது தெரிந்ததே.

பாண் தொடர்பாக குறிப்பிட்ட நிறை மற்றும் விலைகளில் ஏதாவது மாற்றம் செய்யப்பட்டால் சம்பந்தப்பட்டவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ-5)

## பிரதேச செயலகத்திலிருந்து ஆவணங்கள் மீட்கப்பட்டன

தென்மராட்சி,ஒக்.10

தென்மராட்சி பிரதேச செயலகத்தில் மீட்கப்படாமல் இருந்த ஆவணங்களும் கடந்த சனிக்கிழமை மீட்டு வரப்பட்டன.

பிரதேச செயலர் பு.சுந்தரம்பிள்ளையும் கிராம அலுவலர்களும் உத்தியோகத்தர்களும் வாகனங்களில் சென்று ஆவணங்களை மீட்டு வந்தனர்.

கடந்த வாரம் பிரதேச செயலர் சாவகச்சேரிக்குச் சென்று பிரதேச செயலகத்தில் இருந்து முக்கியமான ஆவணங்கள் மீட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-117)

## தேர்தலில் போட்டியிடுவதை விட உயிரை பாதுகாப்பது பெரிய சிரமமாக உள்ளது

### பிரதி அமைச்சர் கூறுகிறார்

அனுராதபுரம் மாவட்டத்தில் போட்டியிட்டு வெல்வதைவிட வேட்பாளர்களும், ஆதரவாளர்களும் தமது உயிரைக் காப்பாற்றிக் கொள்வது மிகுந்த கஷ்ரமாக விடயமாக உள்ளது.

மேற்கண்டவாறு, பொதுமக்கள் ஐக்கிய முன்னணி வேட்பாளரும், திட்ட அமுலாக்கல் நாடாளுமன்ற அலுவல்கள் பிரதி அமைச்சருமான சாந்த பிரேமரத்ன மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரியிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

கட்சிகளுக்கு இடையேயும் கட்சிகளுக்கு உள்ளேயும் நடைபெறும் மோதல்கள் மோசமடைந்து வருவதனால் வேட்பாளர்களும் ஆதரவாளர்களும் உயிர் ஆபாயத்தை எதிர்நோக்கவேண்டியுள்ளது. இந்த நிலைமை நீடித்தால் 'வேட்பாளர்களும், அவர்களுக்கு ஆதரவாக செயற்படுவோரும் தேர்தல் வேலைகளைக் கைவிட்டு உயிரைக் காப்பாற்றி கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுவர்.

பிரபல அரசியல்வாதி ஒருவர் பகிரங்கமாக துப்பாக்கிகள் மற்றும் ஆயுதங்களுடன் தமது ஆதரவாளர்கள் சகிதம் நடமாடி வருவதுடன், எதிராக செயற்படுவோரை எவ்வித தயக்கமுமின்றி தாக்கி வருகின்றார். இத்தகைய செயல்கள் பரவலாக நடக்கின்றன.

வேட்பாளர்களுக்கும், ஆதரவாளர்களுக்கும் மிரட்டல்களும், கொலை அச்சுறுத்தல்களும் தொடர்ந்து விடுக்கப்பட்டு வருகின்றன இப்படி அவர் மேலும் கூறினார். (இ-4)

**உதயவாக்கு**

**தோல்வியைக் கண்டு அஞ்சுபவர்களிடமிருந்து வெற்றி நாணாகவே ஒதுங்கிக் கொள்கிறது.**

*- அரவிந்தர்*

**நாளை**

**புரட்டாதி 25**

**புதன்கிழமை**

*திதி:* திரயோதசி பிற்பகல் 2.29 வரை

*நட்சத்திரம்:* பூரட்டாதி *முன் இரவு* 8.37வரை

கடையிற்சுவாமி குருபூசைநாள்

*சுபநேரம்:* 4.32 - 6.02

*ராகுகாலம்:* 12.02 - 1.32

(இரவுக்கும் பகலுக்கும் பழைய நேரப்படி)

# பொது மக்கள் தாம் விரும்புவோருக்கு வாக்களிக்க அனுமதிக்க வேண்டும்

## சர்வதேச இந்துமத குருபீடத் தலைவர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 10

நீதியானதும் நேர்மையானதும் சுதந்திரமானதுமான தேர்தலையே சகல மக்களும் விரும்புகின்றனர். எனவே பொதுமக்கள் சுதந்திரமாகத் தாம் விரும்பும் வேட்பாளர்களுக்கு தமது வாக்குகளை அளிக்க இடமளிக்கப்பட வேண்டும்.

மேற்கண்டவாறு சர்வதேச இந்து மத குருபீடத்தலைவர் ஸ்ரீ ஐயப்பதாஸன் சாம்பசிவ சிவாச்சாரியார் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அந்த வேண்டுகோளில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;—

தமிழ்மக்களைப் பொறுத்த வரையில் பெரும்பான்மை இனத்தின் இரு பெரும் கட்சிகளும் வடக்கு—கிழக்கு யுத்தத்தை நிறுத்துவோம், தமிழ் மக்களின் நியாயமானகோரிக்கைகளை நிறைவேற்றுவோம் எனத் தேர்தல் காலங்களில் வாக்குறுதிகளைத் தாராளமாக வழங்கியே ஆட்சிக்குவருகின்றன. வந்தபின் வாக்குறுதிகளை மறந்துவிடுகின்றனர்.

ஐந்து வருடத்திற்கு ஒரு முறை நாமும் ''இக்கரைக்கு அக்கரை பச்சை'' என எண்ணி ஏமாந்து வாக்குகளை வழங்குகின்றோம். வேதாளம் மீண்டும் முருங்கை மரம் ஏறிய கதையாக இருக்கின்றது.

எனவே தமிழ் மக்கள் சிந்தித்து வாக்களிப்பது தமது உரிமை என்ற எண்ணத்தோடு தாம் விரும்பும் நல்லவர்களுக்கு வாக்களித்து அவர்களை வெற்றிபெறச் செய்ய வேண்டும்.

சாட்சிக்காரன் காலில் விழுவதை விடச் சண்டைக்காரன் காலில் விழுவதே மேல். சிந்தித்துச் செயற்படுங்கள் — என்றுள்ளது.

(இ-3)

## உணவுக்குப்பதில் பணம்

யாழ்ப்பாணம், ஒக். 10

யாழ்ப்பாணத்தில் இன்று நடைபெறவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் வாக்குச் சீட்டு எண்ணுவதற்காக இரவுக் கடமையில் ஈடுபடவிருக்கும் உத்தியோகத்தர்களுக்கு இரவு வழங்கப்படவுள்ள உணவுப் பார்சலுக்குப் பதிலாகப் பணம் வழங்கப்பட உள்ளது

ஆளுக்கு 250 ரூபா வீதம் வழங்கப்படுமெனவும், உணவினை அவரவர்களே பெற்று உண்ணவேண்டுமெனவும் இதற்கென கச்சேரி வளவிலுள்ள கன்ரீனில் உணவுகளுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(இ-15)

## இடமாற்றம்

தென்மராட்சி, ஒக். 10

நெல்லியடி பழைய ஆஸ்பத்திரி வீதியில் இயங்கி வந்த சாவகச்சேரி பிரதேச சபை தலைமை அலுவலகம் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்கு இடம் மாற்றப்பட்டுள்ளது.

(இ-117)

## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம் 1946 — 05 — 01

மறைவு 1999 — 10 — 08

### அமரர் அப்பாக்குட்டி கந்தசாமி

(கிளை முகாமையாளர், ப. தெ. வள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கம்—கிளிநொச்சி)

மாதங்கள் பன்னிரண்டு மாயமாய்
மறைந்து ஆண்டுகள் ஒன்று ஆனதே!
உங்கள் அன்பும் பரிவும் பாசமும்
எமது நெஞ்சைவிட்டு அகலாது.

மனைவி, மக்கள்,
மருமக்கள், சகோதரன்.

தகவல்:
கா. இராசேஸ்வரன்
(கண்ணன்)

நிரந்தர முகவரி!
தவசிகுளம்,
கொடிகாமம்.

தற்போதைய முகவரி:
சேச் றோட்,
சங்கானை.

(79317)

## நாடாளுமன்றத்...

(7 ஆம் பக்கத் தொடர்)

★ பேருந்து விசேட சேவை இலக்கம்:– 126

இணைக்கும் வாக்களிப்பு நிலையம்:– நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்.

பாதை விவரம்:- பருத்தித்துறை, மந்திகை, நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் மீண்டும் அதே பாதையில் பருத்தித்துறை

புறப்படும் நேரம்:- பருத்தித்துறை 7-00, 8-10, 9-20, 10-30 11-40, 1-35

★ பேருந்து விசேட சேவை இலக்கம்: 127

இணைக்கும் வாக்களிப்பு நிலையம்: நெல்லியடி மகா வித்தி.

பாதை விவரம்: நெல்லியடி ம. மகா வித்தி, குஞ்சர் கடை, உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை, பொலிகண்டி, திக்கம், வதிரி, நெல்லியடி ம. மகா வித்தி. (வட்ட ஓட்டப் பாதை)

புறப்படும் நேரம்: நெல்லியடி மகா வித்தி. 7.00, 8.15, 9.30 10.45, 12.55, 2.10

★ பேருந்து விசேட இலக்கம் 112A, 112B

இணைக்கும் வாக்களிப்பு நிலையங்கள்:- நீர்வேலி அத்தியார், நெல்லியடி மகாவித்தியாலயம்.

பாதை விவரம்:– யாழ்ப்பாணம் நல்லூர், கல்வியங்காடு, நீர்வேலி, அச்சுவேலி, உடுப்பிட்டி, நெல்லியடி மீண்டும் அதே பாதையில் திரும்பி யாழ்ப்பாணம்.

புறப்படும் நேரம்:- யாழ்ப்பாணம் 7-30, 11-00, 2-55, 8-30, 12–30

★ பேருந்து விசேட இலக்கம் 113A, 113B

இணைக்கும் வாக்களிப்பு நிலையங்கள்:- கோண்டாவில் மத்திய மகா வித்தியாலயம், மருதனார்மடம் இராமநாதன், மானிப்பாய் இந்துக் கல்லூரி, சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயம்.

பாதை விவரம்:- யாழ்ப்பாணம், நல்லூர், கல்வியங்காடு, திருநெல்வேலி, கோண்டாவில், தாவடி, மருதனார்மடம், உடுவில், மானிப்பாய், சங்கானை மீண்டும் திரும்பி அதே பாதையில் யாழ்ப்பாணம்.

புறப்படும் நேரம்:- 8-00, 9-00, 11-10, 12-35, 2-25

★ தீவகத்திலுள்ள வாக்களிப்பு நிலையங்களுக்கு வாக்காளர்கள் செல்வதற்கு வசதியாக யாழ். பேருந்து நிலையத்திலிருந்து பின்வருமாறு வாகன ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

1) யாழ்.—> வேலணை — குறிகாட்டுவான்
நேரம்:- 8-12
2) யாழ்.—> ஊர்காவற்றுறை
நேரம்:- 8–12
3) யாழ்.—> மண்டைதீவு
நேரம்:- 8-12
4) யாழ்.—> அராலி—பொன்னாலை—காரைநகர்
நேரம்:- 8–12

# வாக்களிப்பு நிலையங்களின் விவரம்

### நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி

சாவகச்சேரி பிரிவு

| | வாக்கெடுப்பு மாவட்ட இல. | வாக்காளர் அட்டை இல. |
|---|---|---|
| கைதடி குருசாமி வித்தி. | 01 | 1–1730 |
| கைதடிமுத்துக்குமாரசாமிவித் | 02 | 2-1196 |
| கைதடி விக்கினேஸ்வரா வித் | 04 | 1–2001 |

### உடுவில் இராமநாதன் கல்லூரி

சாவகச்சேரி பிரிவு

| | | |
|---|---|---|
| கைதடி முத்துக்குமாரசாமிவித் | 03 | 1–1348 |
| நாவற்குழி மகா வித் | 05 | 1–1218 |
| நாவற்குழி மகா வித் | 06 | 1–1408 |
| மறவன்புலோ சகலகலாவல்லி வித் | 08 | 1·1431 |
| தனங்களப்பு அ.த.க. பாட | 09 | 1- 603 |
| நுணாவில் மேற்கு அ.த.க. பாட | 15 | 1–1864 |
| நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை | 16 | 1-1152 |
| கைதடி நுணாவில் அ.த.க. பாட | 21 | 1-1794 |
| மட்டுவில் தெற்கு அ.மி.த.க. பாட | 22 | 1–1828 |

### கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம்

கிளிநொச்சி பிரிவு

| | | |
|---|---|---|
| பளை மகா வித் | 01 | 1- 727 |

### சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயம்

சாவகச்சேரி பிரிவு

| | | |
|---|---|---|
| நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை | 17 | 1-1488 |

### நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்

சாவகச்சேரி பிரிவு

| | வாக்கெடுப்பு மாவட்ட இல. | வாக்காளர் அட்டை இல. |
|---|---|---|
| மீசாலை வீரசிங்கம் மகா வித் | 10 | 1-1512 |
| மீசாலை வீரசிங்கம் மகா வித் | 11 | 1-1729 |
| மீசாலை வீரசிங்கம் மகா வித் | 28 | 2–1276 |
| மீசாலை வீரசிங்கம் மகா வித் | 29 | 1–1356 |
| சாவகச்சேரி இந்துக் கல்லூரி | 12 | 1-1139 |
| சாவகச்சேரி இந்துக் கல்லூரி | 13 | 1–1154 |
| சாவகச்சேரி இந்துக் கல்லூரி | 20 | 1-1192 |
| கல்வயல் சண்முகநாதன் வித் | 14 | 1–1431 |
| சாவகச்சேரி றிபேக் கல்லூரி | 18 | 1–1830 |
| சாவகச்சேரி றிபேக் கல்லூரி | 19 | 1–1377 |
| சந்திரபுரம் சாந்தநாயகி வித் | 23 | 1–1117 |
| மட்டுவில் கமலாசனி வித் | 24 | 1- 952 |
| மட்டுவில் சந்திரமௌலீச வித் | 25 | 1-1148 |
| சரசாலை தெற்கு சரஸ்வதி வித் | 26 | 1-1229 |
| சரசாலை கணேசா வித் | 27 | 1–1082 |
| கொடிகாமம் திருநாவுக்கரசு | 30 | 1-2503 |
| கொடிகாமம் திருநாவுக்கரசு | 33 | 1–1321 |
| விடத்தல்பளை கமலாசனி வித் | 31 | 1-1228 |
| கச்சாய் அ.த.க. பாடசாலை | 32 | 1-1459 |
| கொடிகாமம் அ.த.க. பாடசாலை | 34 | 1-1575 |
| எழுதுமட்டுவாழ் வடக்கு அ.த.க. பாடசாலை | 35 | 1- 668 |
| எழுதுமட்டுவாழ் ஸ்ரீ கணேசா | 36 | 1-1206 |
| உசன் இராமநாதன் மகா வித் | 37 | 1- 378 |
| உசன் இராமநாதன் மகா வித் | 38 | 1– 681 |
| வரணி சைவப்பிரகாச வித்தி | 39 | 1-1011 |
| கரம்பைக்குறிச்சி அ.த.க. பாடசாலை | 40 | 1- 952 |
| வரணி மகா வித்தியாலயம் | 41 | 1- 635 |
| நாவற்காடு கணபதிப்பிள்ளை த.க. பாட | 42 | 1-1218 |
| வரணி மகா வித்தியாலயம் | 43 | 2–2009 |
| வரணி மகா வித்தியாலயம் | 44 | 1-2112 |

### நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்

கிளிநொச்சி பிரிவு

| | வாக்கெடுப்பு மாவட்ட இல. | வாக்காளர் அட்டை இல. |
|---|---|---|
| வேம்பொடுகேணி மகா வித் | 03 | 1- 850 |
| வேம்பொடுகேணி மகா வித் | 07 | 1- 905 |
| வேம்பொடுகேணி மகா வித் | 08 | 1- 581 |
| பளை மகா வித் | 04 | 1-1930 |
| இளாலி றோ.க.த.க. பாட | 02 | 1- 589 |
| சோரன்பற்று கணேசா வித் | 06 | 1-1246 |

### தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்

பருத்தித்துறை.

| | வாக்கெடுப்பு மாவட்ட இல. | வாக்காளர் அட்டை இல. |
|---|---|---|
| நாகர்கோயில் அ.மி.த.க-பா. | 28 | 1-1347 |
| செம்பியன்பற்று அ.மி.த.க பா. | 29 | 1-1102 |
| தாளையடி றோ.க.த.க பா. | 30 | 1- 670 |
| மருதங்கேணி இ.த.க. பா. | 31 | 1- 947 |
| உடுத்துறை பாரதி ச.ச.நி. | 32 | 1- 899 |
| ஆழியவளை கி இ.த.க. பா. | 33 | 1- 503 |
| வெற்றிலைக்கேணி பர. | 34 | 1- 891 |
| போக்கறுப்பு றோ.க.த.க, பா, | 35 | 1- 252 |
| சுண்டிக்குளம் உப தபால் அலு | 36. | 1- 16 |

சாவகச்சேரி, கிளிநொச்சி வாக்கெடுப்பு பிரிவுகளில் இடம் பெயர்ந்த வாக்காளர்களின் வசதிகருதி அவர்களின் மாற்றப்பட்ட வாக்களிப்பு நிலையமும் அவற்றில் உள்ள அவர்களின் வழமையான வாக்களிப்பு நிலையங்களின் விவரங்களும் வாக்கெடுப்பு மாவட்ட இலக்கமும் அவற்றிலுள்ள உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைக்குரிய தொடர் இலக்கங்களும் கீழே தரப்பட்டுள்ளன.

### மானிப்பாய் இந்துக் கல்லூரி

கிளிநொச்சி

| | | |
|---|---|---|
| பளை மகா வித்தி. | 05 | 01–1315 |

### மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரி

சாவகச்சேரி

| | | |
|---|---|---|
| கோயிலாக்கண்டி மகா. வித். | 07 | 01- 507 |

**தெரிவத்தாட்சி அலுவலர்,**
**யாழ். தேர்தல் மாவட்டம்,**
**இலக்கம் 10** (சி/13303)

# நாடாளுமன்றத் தேர்தல் - 2000 விசேட பஸ் சேவை வசதி

தேர்தல் தினமான 10. 10. 2000 ஆம் திகதி வாக்காளர்கள் தத்தமது வாக்களிப்பு நிலையத்துக்குச் சென்று வாக்களிப்பதற்குத் தெரிவத்தாட்சி அலுவலர் யாழ்ப்பாணம் 10 பணிப்பின் மீது வட பிராந்திய போக்கு வரத்துச் சபையால் கீழ்க் குறிப்பிடப்பட்ட பாதை ஊடாக இலவச பேருந்து சேவைகள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. தனியார் பேருந்துகளும் பயன்படுத்தப்படும்.

★ **பேருந்து விசேட சேவை இலக்கம் 101A, 101B**
**இணைக்கும் வாக்களிப்பு நிலையங்கள்:-** கோண்டாவில் இந்து ம. வி., நீர்வேலி அத்தியார் இந்து, நெல்லியடி ம.வி.
**பாதை விவரம்:-** வட்டுக்கோட்டையிலிருந்து ஆரம்பித்து நவாலி, ஆனைக்கோட்டை, கொக்குவில், கோண்டாவில், இருபாலை, நீர்வேலி ஊடாக நெல்லியடி சென்று மீண்டும் அதே பாதையால் வட்டுக்கோட்டையை வந்தடையும்.
**புறப்படும் நேரம்:-** வட்டுக்கோட்டை 7 மணி, 8 மணி 11மணி 12.30 மணி நெல்லியடி 9 மணி, 10 மணி, 1.30 மணி 4 மணி.

★ **பேருந்து விசேட சேவை இலக்கம் 102A, 102B**
**இணைக்கும் வாக்களிப்பு நிலையங்கள்:-** மானிப்பாய் மகளிர், மருதனார்மடம் இராமநாதன், கோண்டாவில் இந்து நீர்வேலி அத்தியார் இந்து, நெல்லியடி ம. வி.
**பாதை விவரம்:-** வட்டுக்கோட்டையிலிருந்து ஆரம்பித்து நவாலி, மானிப்பாய், மருதனார்மடம், கோண்டாவில், இருபாலை, நெல்லியடி மீண்டும் இதே பாதையால் வட்டுக்கோட்டையை வந்தடையும்.
**புறப்படும் நேரம்:-** வட்டுக்கோட்டை 7.30 மணி, 8.30 மணி, 12.45 மணி, 1.45 மணி, நெல்லியடி 10 மணி, 11 மணி, 3.15 மணி, 4.15 மணி.

**பேருந்து விசேட சேவை இலக்கம்:- 103A, 103B**
**இணைக்கும் வாக்களிப்பு நிலையங்கள்:-** சங்கானை சிவப்பிரகாசம் வித்தி., மானிப்பாய் மகளிர், மருதனார்மடம் இராமநாதன், நீர்வேலி அத்தியார் இந்து, நெல்லியடி ம. வி.
**பாதை விவரம்-** வட்டுக்கோட்டையிலிருந்து ஆரம்பித்துச் சித்தன்கேணி, சங்கானை, சண்டிலிப்பாய், மானிப்பாய், தாவடி, மருதனார்மடம் சந்தி, உரும்பிராய், கோப்பாய், நீர்வேலி, அச்சுவேலி, நெல்லியடி மீண்டும் இதே பாதையால் வட்டுக்கோட்டை திரும்பும்.
**புறப்படும் நேரம்-** வட்டுக்கோட்டை 7 மணி, 9 மணி, 11. 30 மணி, 2 மணி, நெல்லியடி-9. 15 மணி, 11. 15, மணி, 2. 10 மணி, 4. 15 மணி.

★ **பேருந்து விசேட சேவை இலக்கம் 104A, 104B**
**இணைக்கும் வாக்களிப்பு நிலையங்கள்-** சங்கானை, சிவப்பிரகாசம் வித்தி, மானிப்பாய் மகளிர், கோண்டாவில் இந்து, நீர்வேலி அத்தியார் இந்து, நெல்லியடி ம. வி.
**பாதை விவரம்-** மூளாயில் ஆரம்பித்து சுழிபுரம், சித்தன்கேணி, சங்கானை, சண்டிலிப்பாய், மானிப்பாய், கோண்டாவில், இருபாலை, நீர்வேலி, அச்சுவேலி, நெல்லியடி இதே பாதையால் மீண்டும் மூளாய் திரும்பும்.
**புறப்படும் நேரம்:-** மூளாய் 7 மணி, 7.30 மணி, 11.30 மணி 12 30 மணி, நெல்லியடி 9.15 மணி, 9.45 மணி, 11.30 மணி, 4. மணி

★ **பேருந்து விசேட சேவை இலக்கம் 105A, 105B**
**இணைக்கும் வாக்களிப்பு நிலையங்கள்:-** மருதனார்மடம் இராமநாதன், கோண்டாவில்இந்து ம.வி, நீர்வேலி அத்தியார் இந்து. நெல்லியடி ம.வி.
**பாதை விவரம்:-** மூளாயிலிருந்து ஆரம்பித்து சுழிபுரம், சித்தன்கேணி, சங்கானை, சண்டிலிப்பாய், உடுவில், மருதனார்மடம்சந்தி, கோண்டாவில், இருபாலை, நீர்வேலி, அச்சுவேலி, நெல்லியடி இதே பாதையால் மீண்டும் மூளாய் திரும்பும்.
**புறப்படும்நேரம்:-** மூளாய்- 8 மணி, 9 மணி, 12.45 மணி. 1.45 மணி, நெல்லியடி- 10. 10மணி, 11.10மணி, 2. 55மணி, 4மணி.

★ **பேருந்து விசேட சேவை இலக்கம் 106A, 106B**
**இணைக்கும் வாக்களிப்பு நிலையங்கள்-** மருதனார்மடம் இராமநாதன், நீர்வேலி அத்தியார் இந்து, நெல்லியடி ம. வி.
**பாதை விவரம்:—** இளவாலையிலிருந்து ஆரம்பித்து பண்டத்தரிப்பு, பிரான்பற்று, தொட்டிலடி, சண்டிலிப்பாய், உடுவில், மருதனார்மடம், உரும்பிராய், கோப்பாய், நீர்வேலி, அச்சுவேலி, நெல்லியடி மீண்டும் இதே பாதையால் இளவாலையை வந்தடையும்.
**புறப்படும்நேரம்:** இளவாலை 7மணி, 7.30, மணி, 11 மணி 11. 55 மணி. நெல்லியடி 9 மணி, 9. 30 மணி, 1 .15 மணி, 4 மணி.

★ **பேருந்து விசேட சேவை இலக்கம் 107A, 107B**
**இணைக்கும் வாக்களிப்பு நிலையங்கள்:—** சங்கானை சிவப்பிரகாசம் வித்தி. மானிப்பாய் மகளிர், கோண்டாவில் இந்து ம. வி. நீர்வேலி, நீர்வேலி அத்தியார் இந்து, நெல்லியடி ம. வி.
**பாதை விவரம்:—** இளவாலை, பண்டத்தரிப்பு, சித்தன்கேணி, சங்கானை, சண்டிலிப்பாய், மானிப்பாய், தாவடி, கோண்டாவில், இருபாலை, நீர்வேலி, அச்சுவேலி, நெல்லியடி மீண்டும் இதே பாதையால் இளவாலையை வந்தடையும்.
**புறப்படும் நேரம்:—** இளவாலை- 8 மணி, 9 மணி, 1.15 மணி, 1.05 மணி, நெல்லியடி 10. 20மணி, 11மணி, 1 .25 மணி, 4.25மணி.

★ **பேருந்து விசேட சேவை இலக்கம் 108A, 108B**
**இணைக்கும் வாக்களிப்பு நிலையங்கள்:** மருதனார்மடம் இராமநாதன், கோண்டாவில் இந்து. ம. வி., நீர்வேலி அத்தியார் இந்து., நெல்லியடி ம.வி.
**பாதை விவரம்:-** தெல்லிப்பழை மல்லாகம், சுன்னாகம், மருதனார்மடம், கோண்டாவில், இருபாலை, நீர்வேலி அச்சுவேலி, நெல்லியடி மீண்டும் இதே பாதையால் தெல்லிப்பழை திரும்பும்.
**புறப்படும் நேரங்கள்:-** தெல்லிப்பழை 7 மணி, 7. 30 மணி, 10. 40 மணி, 11. 15 மணி, நெல்லியடி 8. 50 மணி, 9. 20 மணி, 2 மணி, 4 மணி.

★ **பேருந்து விசேட சேவை இலக்கம் 109A, 109B**
**இணைக்கும் வாக்களிப்பு நிலையங்கள்:-** மருதனார்மடம் இராமநாதன், மானிப்பாய் மகளிர், கோண்டாவில் இந்து. ம. வி., நீர்வேலி அத்தியார், நெல்லியடி ம. வி.
**பாதை விவரம்:-** தெல்லிப்பழை, மல்லாகம், சுன்னாகம், மருதனார்மடம், மானிப்பாய், தாவடி, கோண்டாவில், இருபாலை, நீர்வேலி, அச்சுவேலி, நெல்லியடி மீண்டும் இதே பாதையால் தெல்லிப்பழை திரும்பும்.
**புறப்படும் நேரங்கள்-:** தெல்லிப்பழை 8மணி, 9மணி, 1மணி 1. 55 மணி நெல்லியடி 10. 15 மணி 11. 15மணி 3. 15 மணி, 4.10 மணி.

★ **பேருந்து விசேட சேவை இலக்கம் 110A, 110B**
**இணைக்கும் வாக்களிப்பு நிலையங்கள்:-** சங்கானை சிவப்பிரகாசம் வித்தி, மானிப்பாய் மகளிர், மருதனார்மடம் இராமநாதன், நீர்வேலி அத்தியார், நெல்லியடி ம. வி.
**பாதை விவரம்:-** தெல்லிப்பழை, மல்லாகம், சுன்னாகம், கந்தரோடை, மாசியப்பிட்டி, தொட்டிலடி, சங்கானை, மானிப்பாய், தாவடி, மருதனார்மடம், உரும்பிராய், கோப்பாய், நீர்வேலி, அச்சுவேலி, நெல்லியடி.
**புறப்படும் நேரங்கள்:** தெல்லிப்பழை — 7.30 மணி, 8.30மணி 1.05மணி 2.05மணி நெல்லியடி 10 05 மணி 11.05 மணி, 4 மணி நீர்வேலி — 3.50 மணி (நீர்வேலி அத்தியார்).

★ **பேருந்து விசேட சேவை இலக்கம் 111A, 111B**
**இணைக்கும் வாக்களிப்பு நிலையங்கள்-:** கோண்டாவில் இந்து ம. வி., நீர்வேலி அத்தியார், நெல்லியடி ம. வி.
**பாதை விவரம்:-** யாழ்ப்பாணம், திருநெல்வேலி, கோண்டாவில், இருபாலை, நீர்வேலி, அச்சுவேலி, நெல்லியடி மீண்டும் இதே பாதையால் யாழ்ப்பாணம் வந்தடையும்
**புறப்படும் நேரங்கள்:-** யாழ்ப்பாணம் — 7 மணி, 8 மணி, 10.30 மணி, 11.30 மணி, 2.25 மணி, நெல்லியடி — 8.45 மணி, 9.45 மணி, 12.40 மணி, 1.40 மணி, 4.10 மணி.

★ விசேட சேவை இலக்கம் 114
இணைக்கும் வாக்களிப்பு நிலையங்கள்;- கோண்டாவில் ம. மகா வித் மானிப்பாய் இந்து மகளிர், சங்கானை சிவப்பிரகாசம், மருதனார்மடம் இராமநாதன், நீர்வேலி அத்தியார்.
பாதை விவரம்;- வேலணை, யாழ்ப்பாணம், திருநெல்வேலி, கோண்டாவில், தாவடி, மானிப்பாய், சண்டிலிப்பாய், சங்கானை, உடுவில், மருதனார்மடம், உரும்பிராய், கோப்பாய், நீர்வேலி. மீண்டும் திரும்பி அதே பாதையில் வேலணை.
புறப்படும் நேரங்கள்:- வேலணை 7.00, 12 35,
இணைக்கும் வாக்களிப்பு நிலையங்கள்:- நெல்லியடி மத் மகா வித்தியாலயம்.
பாதை விவரம்:- பருத்தித்துறை, பொலிகண்டி, வல்வெட்டித்துறை, தொண்டமனாறு, உடுப்பிட்டி, நெல்லியடி மத்திய மகா வித் மீண்டும் அதே பாதையில். பருத்தித்துறை.
புறப்படும் நேரங்கள்;- பருத்தித்துறைப் பாதைகள் 7.00, 8.30 10.40, 12.55, 2.45.

★ விசேட சேவை இலக்கம் 117
இணைக்கும் வாக்களிப்பு நிலையங்கள்:- நீர்வேலி அத்தியார், கோண்டாவில் ம. வித்தியாலயம், இராமநாதன் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி, சங்கானை சிவப்பிரகாசம்.
பாதை விவரம்:- பருத்தித்துறை, பொலிகண்டி, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, தொண்டமனாறு, அச்சுவேலி, நீர்வேலி, இருபாலை, கோண்டாவில், தாவடி, மருதனார்மடம், உடுவில்; மானிப்பாய், சங்கானை மீண்டும் திரும்பி அதே பாதையில் பருத்தித்துறை.
புறப்படும் நேரங்கள்;- 7.00, 8 00, 1.05, 1.55.

★ பேருந்து விசேட இலக்கம் 118 A, 118 B
இணைக்கும் வாக்களிப்பு நிலையங்கள்:- நெல்லியடி ம. மகா வித்தியாலயம், மருதனார்மடம் இராமநாதன், மானி. இந்துக் கல்லூரி, சங்கானை சிவப்பிரகாச வித்தியாசாலை.
பாதை விவரம்:- பருத்தித்துறை, மந்திகை, கவிகை, நெல்லியடி ம. மகா வித்தியாலயம், புறாப்பொறுக்கி, அச்சுவேலி, கோப்பாய், மருதனார்மடம், உடுவில், மானிப்பாய், சண்டிலிப்பாய், சங்கானை மீண்டும் திரும்பி அதே பாதையில் பருத்தித்துறை.
புறப்படும் நேரங்கள்:- 7.00, 8.00, 11.30, 12.55.

★ பேருந்து விசேட சேவை இலக்கம் 119A, 119B
இணைக்கும் வாக்களிப்பு நிலையங்கள்:- நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம், நீர்வேலி அத்தியார், கோண்டாவில் மகாவித்தியாலயம், மருதனார்மடம் இராமநாதன், மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரி, சங்கானை சிவப்பிரகாசம்.
பாதை விவரம்:- பருத்தித்துறை, மந்திகை, நெல்லியடி, அச்சுவேலி, நீர்வேலி, இருபாலை, கோண்டாவில், தாவடி, மருதனார்மடம், உடுவில், மானிப்பாய், சங்கானை மீண்டும் திரும்பி அதே பாதையில் பருத்தித்துறை.
புறப்படும் நேரம்:- பருத்தித்துறையிலிருந்து 7-00, 8-00, 11-30, 12-55

★ விசேட சேவை இலக்கம் 120
இணைக்கும் வாக்களிப்பு நிலையங்கள்:- குடத்தனை அ.த.க. பாடசாலை, குடத்தனை கரையூர் அ.மி.த.க. பாடசாலை.
பாதை விவரம்:- பருத்தித்துறை, தும்பளை, கற்கோவளம், வல்லிபுரம், குடத்தனை, மீண்டும் அதே பாதையில் பருத்தித்துறை,
புறப்படும் நேரம்:- பருத்தித்துறையில் இருந்து 7-00, 9-05, 12-00, 3-15

★ பேருந்து விசேட சேவை இலக்கம்; 121
இணைக்கும் வாக்களிப்பு நிலையம்:- குடத்தனை அ. த. க. பாடசாலை குடத்தனை கரையூர் அ. மி, த. க. பாடசாலை
பாதை விவரம்:- பருத்தித்துறை, மந்திகை, உபயகதிர்காமம், வல்லிபுரம், குடத்தனை மீண்டும் அதே பாதையில் பருத்தித்துறை
புறப்படும் நேரம்:- பருத்தித்துறை 8-00, 10-30, 1-45

★ பேருந்து விசேட சேவை இலக்கம்:- 122
இணைக்கும் வாக்களிப்பு நிலையம்:- தும்பளை சிவ. மகா வித்தியாலயம்.
பாதை விவரம்:- அம்பன், குடத்தனை, வல்லிபுரம், தும்பளை மீண்டும் அதே பாதையில் அம்பன்
புறப்படும் நேரம்:- அம்பன் 7-00, 9-00, 11-10, 1-45

★ பேருந்து விசேட இலக்கம்:- 123A 123B
இணைக்கும் வாக்களிப்பு நிலையம்:- தெல்லிப்பழை புனர்வாழ்வு நிலையம்
பாதை விபரம்;- யாழ்ப்பாணம், மானிப்பாய், உடுவில், தெல்லிப்பழை மீண்டும் அதேபாதையில் யாழ்ப்பாணம்.
புறப்படும் நேரம்:- 7-00, 9-20, 11-40, 2-25, 8-00 10-20 1-05

★ பேருந்து விசேட சேவை இலக்கம் 124A 124B
இணைக்கும் வாக்களிப்பு நிலையம் தெல்லிப்பழை புனர்வாழ்வு
பாதை விவரம்:- பருத்தித்துறை, மந்திகை, கவிகை, நெல்லியடி. அச்சுவேலி, கோப்பாய், மருதனார்மடம், சுன்னாகம், தெல்லிப்பழை மீண்டும் அதே பாதையில் பருத்தித்துறை.
புறப்படும் நேரம்:- பருத்தித்துறை 7-00, 8-00, 11-00, 12-25

★ பேருந்து விசேட இலக்கம்:- 125A, 125B
இணைக்கும் வாக்களிப்பு நிலையம்:- தெல்லிப்பழை புனர்வாழ்வு நிலையம்
பாதைவிவரம்;- பருத்தித்துறை, பொலிகண்டி, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, அச்சுவேலி, கோப்பாய், மருதனார்மடம், சுன்னாகம். தெல்லிப்பழை மீண்டும் அதே பாதையில் பருத்தித்துறை
புறப்படும் நேரம்:- 7-00, 8-00, 11-00 12-25

(8 ஆம் பக்கம் பார்க்க)

# அரசாங்க அறிவித்தல் நாடாளுமன்றத் தேர்தல் 2000-10-10

## இடம்பெயர்ந்த வாக்காளர்களுக்கு மாற்று வாக்கெடுப்பு நிலையங்களிலே வாக்களிக்கும் வசதி

தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி ஆகிய பிரதேசங்களில் வசித்த / இடம்பெயர்த வாக்காளர்களின் வசதி கருதி அவர்களுக்காக முன்பு அமைக்கப்பட்ட வாக்கெடுப்பு நிலையத்தின் பெயரும் அவர்களின் பிரதேசமும் தற்பொழுது அவர்கள் சென்று வாக்களிக்க வேண்டிய மாற்று நிலையமும் கீழே காட்டப்பட்டுள்ளன.

அந்தந்தப் பிரதேச வாக்காளர் யாவரும் தற்பொழுது சென்று வாக்களிக்க வேண்டிய நிலையத்திலேயே வாக்களித்தல் வேண்டும். எனவே இவர்களுக்காக விசேட பிரயாண வசதிகள் 2000--10--10 ஆம் திகதியன்று ஏன்னால் செய்து கொடுக்கப்படும்.

வாக்கெடுப்புப் பிரிவு – 'ஏ' – சாவகச்சேரி

**தெரிவத்தாட்சி அலுவலர்**
தேர்தல் மாவட்டம் இல. 10, யாழ்ப்பாணம், 2000—10—10.

| வாக்கெடுப்பு மாவட்ட இல. | பிரதேசம் | முன்னைய வாக்கெடுப்பு நிலையம் | தற்பொழுது சென்று வாக்களிக்க வேண்டிய நிலையம் | பின்வரும் உத்தியோக பூர்வ வாக்காளர் அட்டைகளுக்குரியவர்கள் தொடக்கம் | வரை |
|---|---|---|---|---|---|
| 01. | கைதடி | யா/கைதடி குருசாமி வித்தியாலயம் | யா/ நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி | 01 | — 1730 |
| 02. | கைதடி | யா/கைதடி முத்துக்குமாரசாமி வித்தியாலயம் | யா/ " " " | 02 | — 1196 |
| 03. | கைதடி | யா/கைதடி முத்துக்குமாரசாமி வித்தியாலயம் | யா/ உடுவில் இராமநாதன் கல்லூரி | 01 | — 1348 |
| 04. | கைதடி | யா/கைதடி விக்கினேஸ்வரா வித்தியாலயம் | யா/ நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி | 01 | — 2001 |
| 05. | நாவற்குளி | யா/கைதடி நாவற்குளி மகா வித்தியாலயம் | யா/ உடுவில் இராமநாதன் கல்லூரி | 01 | — 1218 |
| 06. | நாவற்குளி | யா/கைதடி நாவற்குளி மகா வித்தியாலயம் | யா/ " " | 01 | — 1403 |
| 07. | கோகிலாக்கண்டி | யா/கோகிலாக்கண்டி மகாலக்சுமி வித்தியாலயம் | யா/ மானிப்பாய் இந்துக் கல்லூரி | 01 | — 507 |
| 08. | கைதடி நாவற்குளி, மறவன்புலோ | யா/மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாலயம் | யா/ உடுவில் இராமநாதன் கல்லூரி | 01 | — 1431 |
| 09. | தனங்களப்பு | யா/தனங்களப்பு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை | யா/ " " | 01 | — 603 |
| 10. | மீசாலை தெற்கு | யா/மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம் | யா/ நெல்லியடி. மத்திய மகா வித்தியாலயம் | 01 | — 1512 |
| 11. | மீசாலை தெற்கு | யா/மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம் | யா/ " " | 01 | — 1729 |
| 12. | சாவகச்சேரி வடக்கு | யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி | யா/ " " | 01 | — 1169 |
| 13. | சாவகச்சேரி வடக்கு | யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி | யா/ " " | 01 | — 1154 |
| 14. | சாவகச்சேரி தெற்கு | யா/கல்வயல் சண்முகானந்தா வித்தியாலயம் | யா/ " " | 01 | — 1431 |
| 15. | நுணாவில் மேற்கு | யா/நுணாவில் மேற்கு அ.த.க. பாடசாலை | யா/ உடுவில் இராமநாதன் கல்லூரி | 01 | — 1864 |
| 16. | நுணாவில் கிழக்கு-மேற்கு | யா/நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயம் | யா/ " " | 01 | — 1152 |
| 17. | சாவகச்சேரி தெற்கு | யா/நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயம் | யா/ சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம் | 01 | — 1488 |
| 18. | சாவகச்சேரி தெற்கு | யா/டிறிபேக் கல்லூரி, சாவகச்சேரி | யா/ நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் | 01 | — 1830 |
| 19. | சாவகச்சேரி தெற்கு | யா/ டிறிபேக் கல்லூரி, சாவகச்சேரி | யா/ " " | 01 | — 1377 |
| 20. | சாவகச்சேரி தெற்கு | யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி | யா/ " " | 01 | — 1192 |
| 21. | கைதடி - நுணாவில், மட்டுவில் | யா/ கைதடி நுணாவில் அ. த. க. பாடசாலை | யா/ உடுவில் இராமநாதன் கல்லூரி | 01 | — 1794 |
| 22. | மட்டுவில் தெற்கு | யா/ மட்டுவில் தெற்கு அ. மி. த க. பாடசாலை | யா/ " " | 01 | — 1823 |
| 23. | மட்டுவில் வடக்கு | யா/ சந்திரபுரம் சாந்தநாயகி வித்தியாலயம் | யா/ நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் | 01 | — 1117 |
| 24. | மட்டுவில் வடக்கு | யா/ மட்டுவில் கமலாசனி வித்தியாலயம் | யா/ " " | 01 | — 952 |
| 25. | மட்டுவில் வடக்கு | யா/ மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலயம் | யா/ " " | 01 | — 1148 |
| 26. | சரசாலை | யா/ சரசாலை தெற்கு சரஸ்வதி வித்தியாலயம் | யா/ " " | 03 | — 1229 |
| 27. | சரசாலை | யா/ சரசாலை கணேச வித்தியாலயம் | யா/ " " | 01 | — 1082 |
| 28. | மீசாலை வடக்கு | யா/ வீரசிங்கம் மகா வித்தியாலயம், மீசாலை | யா/ " " | 02 | — 1276 |
| 29. | மீசாலை வடக்கு | யா/ வீரசிங்கம் மகா வித்தியாலயம் மீசாலை | யா/ " " | 01 | — 1355 |
| 36. | எழுதுமட்டுவாள் தெற்கு | யா/ எழுதுமட்டுவாள் ஸ்ரீ கணேச வித்தியாலயம் | யா/ " " | 01 | — 1266 |
| 43. | தாவளை - இயற்றாலை | யா/ வரணி மகா வித்தியாலயம் | யா/ " " | 02 | — 2009 |
| 44. | மந்துவில் | யா/ வரணி மகா வித்தியாலயம் | யா/ " " | 01 | — 2112 |

வாக்கெடுப்புப் பிரிவு:-
'கே' - கிளிநொச்சி

| வாக்கெடுப்பு மாவட்ட இல. | பிரதேசம் | முன்னைய வாக்கெடுப்பு நிலையம் | தற்பொழுது சென்று வாக்களிக்க வேண்டிய நிலையம் | தொடக்கம் | வரை |
|---|---|---|---|---|---|
| 01. | வேம்பொடுகேணி, இத்தாவில் | கி/ பளை மகா வித்தியாலயம் | யா/ கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம் | 01 | — [illegible] |
| 02. | கிளாலி | கி/ கிளாலி றோமன் கத்தோலிக்க த. க. பாடசாலை | ★ யா/ நெல்லியடி மத்திய மகா " | 01 | — 319 |
| 03. | முகமாலை | கி/ வேம்பொடுகேணி மகா வித்தியாலயம் | யா/ நெல்லியடி மத்திய மகா " | 01 | — [illegible] |
| 04. | தம்பகாமம், வண்ணான்கேணி, பெரியபளை | கி/ பளை மகா வித்தியாலயம் | யா/ " " " | 01 | — 1930 |
| 05. | புலோப்பளை மேற்கு, புலோப்பளை கிழக்கு | கி/ பளை மகா வித்தியாலயம் | யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி | 02 | — 1315 |
| 06. | தர்மக்கேணி, சோரன்பற்று, மாசார் | கி/ சோரன்பற்று கணேச வித்தியாலயம் | ★ யா/ நெல்லியடி மத்திய மகா " | 01 | — 1246 |
| 07. | முகாவில், யல்வில், ஊரிவளிக்கன்பற்று, இயக்கச்சி | கி/ வேம்பொடுகேணி மகா வித்தியாலயம் | யா/ நெல்லியடி, மத்திய மகா வித்தியாலயம் | 01 | — [illegible] |
| 08. | சங்கத்தார்வயல், கொத்தான்டார் குளம், கோவில்வயல் | கி/ வேம்பொடுகேணி மகா வித்தியாலயம் | யா/ " " | 01 | — 531 |

(சி/132041)

(★ 07—10—2000 அன்று பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தில் செய்யப்பட்ட மாற்றங்கள்)

# யூகோஸ்லாவியாவின் அதிபராக
# கொஸ்டுனிகா பதவியேற்றார்

பெல்கிரேட், ஒக. 10
யூகோஸ்லாவிய அரசமைப்பு நீதிமன்றம், எதிர்க்கட்சித் தலைவர் ஒயில்லா கொஸ்டுனிகா, அதிபர் தேர்தலில் வெற்றி பெற்றதாகத் தீர்ப்பு வழங்கியதை அடுத்து அவர் அதிபராகப் பதவியேற்றார்.

கடந்த மாதம் 24 ஆம் திகதி நடைபெற்ற யூகோஸ்லாவிய அதிபர் பதவிக்கான தேர்தலில் போட்டியிட்ட தற்போதைய அதிபர் மிலோசவிக்கைவிட எதிர்க்கட்சி வேட்பாளர் ஒயில்லா கொஸ்டுனிகா, அதிக வாக்குகளைப் பெற்றிருந்த போதும் பெரும்பான்மைப்பலம் பெறவில்லை யெனக் கூறி தேர்தல் ஆணையம் மறு வாக்குப் பதிவை அறிவித்திருந்தது.

இதற்கு எதிராக ஆர்பாட்டம் நடத்திய எதிர்க் கட்சி ஆதரவாளர்கள் நாடாளுமன்றக் கட்டடத்தையும், அரசுத் தொலைக் காட்சி நிலையத்தையும் ஆக்கிரமித்துக் கொண்டனர்.

அத்துடன் நாட்டின் அரசமைப்பு நீதிமன்றத்தில் கொஸ்டுனிகாவை அதிபராக அறிவிக்குபடி அவர்கள் மனுச் செய்தனர்.

இந்த மனு மீதான தீர்ப்பில் கொஸ்டுனிகாவை அதிபராக அரசமைப்பு நீதிமன்றம் அறிவித்துள்ளது.

அவருக்கு இராணுவம் ஒத்துழைப்பு வழங்குவதாக அறிவித்தது.

இதனை அடுத்து கொஸ்டுனிகா அதிபராகப் பதவியேற்றுள்ளார்.

முன்னாள் அதிபர் மிலோசவிக் எதிர்க்கட்சித் தலைவராகச் செயற்படப் போவதாக அறிவித்துள்ளார்.

இதற்கிடையில் சர்வதேசப் போர்க் குற்றங்களுக்கான நீதிமன்றம் மிலோசவிக் சரணடைய வேண்டும் என்றும்—இல்லாவிட்டால் கைது செய்யப்பட வேண்டும் என்றும் அறிவித்துள்ளது

யூகோஸ்லாவியாவுக்கு ஐரோப்பிய ஒன்றியம் உதவிகளை வழங்குவதாக அறிவித்துள்ளது. மிலோசவிக்கின் தோல்வியால் ஐரோப்பாவில் கம்யூனிஸ் அரசு முடிவுக்குவந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

(ஒ-8)

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 23 | 14 |
| — | — |
| 03 | 10 |
| — | — |
| 1923 | 1997 |

சுதுமலையைப் பிறப்பிடமாகவும் நவாலி கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட

### திருமதி நாகலிங்கம் கண்மணி

**திதி: 10- 10- 2000**

அன்பு ததும்பும் முகம் கண்டு ஆண்டு மூன்றனாதம்மா!
என்பு தோல் தந்தெமை உலகில் வாழ
வைத்தவனே!
வறுமைகள் வந்தபோது எமை வாடாமல் காத்தவளே!
வசதிகள் வந்தபோது எமை வாடவிட்டு சென்ற
தேனம்மா!
விழிகளில் ஈரம் வடிய விடியும் காலை — தினமும்
மலரெடுத்துத் தொழுகின்றோமம்மா;

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.
நா. தெட்சணாமூர்த்தி
39, மாவடி றோட்,
யாழ்ப்பாணம்.
(79316)

## விருது

இரண்டாயிரம் ஆண்டுக்கான காந்தி சர்வதேச சமாதான விருது பிரிட்டிஷ் பேராசிரியர் ஆடம்பேர்ள் என்பவருக்கு, ஆபிரிக்கப் போர்ப் பகுதிகளில் ஆற்றிய பணிகளுக்காக வழங்கப்பட்டுள்ளது. (ஒ)

# 'டான்சி' நில பேர ஊழல் வழக்கில் ஜெயலலிதாவுக்கு 3 வருட சிறை!

சென்னை, ஒக். 10
தமிழக அரசின் 'டான்சி' நிறுவனத்துக்குச் சொந்தமான நிலத்தை மிகக் குறைந்த விலைக்கு வாங்கியதன் மூலம் அரசுக்கு மூன்றரைக் கோடி ரூபா இழப்பு ஏற்படுத்தியதாகக் குற்றஞ் சாட்டப்பட்ட வழக்கில் முன்னாள் முதல்வர் ஜெயலலிதா அவரது தோழி சசிகலா மற்றும் முன்னாள் அரசு அதிகாரிகள் நால்வருக்கு சிறப்புத் தனிநீதிமன்றம் தலா மூன்று ஆண்டுகள் சிறைத்தண்டனையும், 10 ஆயிரம் ரூபா அபராதமும் விதித்துள்ளது.

மற்றொரு ஊழல் வழக்கில் ஜெயலலிதா மற்றும் சசிகலாவுக்கு இரு ஆண்டுகள் சிறைத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

2 ஆண்டுகளுக்கு மேல் சிறைத்தண்டனை பெற்றவர்கள் தேர்தல்களில் போட்டியிட இந்தியாவில் தடை விதிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

(ஒ)

## ஈராக்குக்கு சிரிய விமானம்

பாக்தாத், ஒக். 10
சிரியா நாட்டு விமானம் ஈராக் தலைநகர்பாக்தாத்தில் தரையிறங்கியுள்ளது.

ஐ. நாவின் தடைகளை மீறி ஈராக்குக்கு விமானங்களை அனுப்பும் நாடுகளின் வரிசையில் ரஷ்யா, பிரான்ஸ், ஜோர்டான் ஆகியவற்றுடன் சிரியாவும் சேர்ந்து கொண்டுள்ளது.

## வழக்குத் தாக்கல்

ஹராரே, ஒக். 10
சிம்பாப்வே எதிர்க்கட்சித் தலைவர் மோஹன் சாஞ்சராய் மீது அதிபர் ரொபேர்ட் முகாபேயை மிரட்டும் வகையில் கூட்டமொன்றில் பேசியதாக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (ஒ)

## அமெரிக்கா கருத்து

நியூயோர்க், ஒக். 10
வன்முறைகள் நீடிக்கும் வரை இந்தியா - பாகிஸ்தான் இடையே பேச்சுவார்த்தைகளால் பயனில்லை என்று அமெரிக்க வெளியுறவு துணை அமைச்சர் கால் இண்டபெட் கருத்துத் தெரிவித்துள்ளார்.

# நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் - 2000-10-10
## வாக்களித்தலும் விருப்புத் தெரிவித்தலும் பற்றிய சுருக்கமான விளக்கம்

வாக்குச் சீட்டின் மாதிரிப் படிவம்

| | | |
|---|---|---|
| ''அ'' கட்சி | சின்னம் | |
| ''ஆ'' கட்சி | சின்னம் | |
| ''இ'' கட்சி | சின்னம் | |
| சுயேச்சைக் குழு 1 | சின்னம் | |
| சுயேச்சைக் குழு 2 | சின்னம் | |
| சுயேச்சைக் குழு 3 | சின்னம் | |

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 11 | 12 | | | | | | | | |

01. இது வாக்குச் சீட்டின் மாதிரியொன்று மட்டுமே.

02. அரசியற் கட்சிகளினதும் சுயேச்சைக் குழுக்களினதும் பெயர்கள் அவைகளின் சின்னங்களுடன் மேற்பகுதியில் காட்டப்பட்டுள்ளது. ஒவ்வொரு சின்னத்திற்கும் எதிரே வெற்றுக்கூடொன்று உள்ளது. இதில் ஏதேனுமொரு கூடொன்றில் உங்கள் வாக்கை அடையாளமிடலாம். வாக்களிக்கும்போது நீங்கள் விரும்பும் சின்னத்திற்கு எதிரேயுள்ள வெற்றுக்கூட்டில் 'புள்ளடி' யிடல் வேண்டும்.

03. ஒவ்வொரு வேட்பாளருக்கும் பிரித்தொதுக்கப்பட்டுள்ள இலக்கங்கள் முறையே ஒரு வரிசையில் பத்து என்றவாறு கீழ்ப் பகுதியில் காட்டப்பட்டுள்ளது. விருப்பொன்றை அடையாளமிடும் போது நீர்விரும்பும் வேட்பாளரின் இலக்கத்தின் மீது உங்களால் 'புள்ளடி' இடப்படல் வேண்டும். வேட்பாளர்கள் மூவருக்கு மேற்படாத எண்ணிக்கைக்கு அதாவது அவ்விலக்கங்கள் மூன்றுக்கு மேற்படாத எண்ணிக்கை மீது உங்கள் விருப்பினை அடையாளமிட முடியும்.

04. வாக்கொன்று இல்லாத வாக்குச்சீட்டு செல்லுபடியற்றதாகும்; அது எவ்வித பெறுமதியுமற்றதோடு அல்லாமல் நிராகரிக்கவும் படும் ஆகையினால் முதலில் வாக்கை அடையாளமிட்டு அதன் பின் விருப்பமாயின் விருப்புக்களை அடையாளமிடுவதே பொருத்தமானது என்பதைத் தயவுகூர்ந்து நினைவிற் கொள்ளவும்.

தயானந்த திசாநாயக்க,
தேர்தல்கள் ஆணையாளர்.

தேர்தல்கள் செயலகம்,
சரண மாவத்தை,
இராஜகிரிய,
ஸ்ரீ ஜயவர்த்தனபுர.

(சி/13295)

# நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் 2000-10-10
## வாக்காளர்களுக்கான அறிவித்தல்

இத் தேர்தலுக்கான வாக்கெடுப்பு 2000 ஆண்டு ஒக்ரோபர் மாதம் 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப. 7.00 மணிக்கும் பி.ப. 4.00 மணிக்கும் இடையில் நடைபெறவிருக்கின்றது வாக்காளர்கள் தமது வாக்கெடுப்பு நிலையங்களுக்கு நேரகாலத்தோடு செல்லுமாறு அறிவுறுத்தப்படுகின்றார்கள்

02. உங்களுக்கு அனுப்பப்பட்ட வாக்கெடுப்பு அட்டைகள் தேருநர் பதிவேடுகளில் தரப்பட்டுள்ளவாறு வாக்கெடுப்பு நிலையம், பெயர், தொடர் இலக்கம் முதலிய விவரங்களைத் தருகின்றன. ஆனால் வாக்கெடுப்பு அட்டையொன்று வாக்குச் சீட்டுக்களைப் பெற்றுக் கொள்வதற்கு அவசியமாகாது. நீங்கள் பதிவு செய்யப்பட்ட வாக்காளர் ஒருவரானால் தயவுசெய்து உங்களது வாக்கெடுப்பு நிலையத்திற்குச் சென்று வாக்குச் சீட்டொன்றைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

03 சிங்களத்திலும் தமிழிலும் அச்சிடப்பட்ட அறிவித்தல் ஒன்று ஒவ்வொரு குடிமனைக்கும் வாக்கெடுப்பு அட்டைகளுடன் அனுப்பப்பட்டுள்ளது. இவ்வறிவித்தல் ஒவ்வொரு கட்சியினது அல்லது குழுவினது அபேட்சகர்களையும் அவர்கள் ஒவ்வொருவருக்கும் வழங்கப்பட்ட தொடர் எண்களையும் காட்டுகின்றன.

04 வாக்குச் சீட்டுகளில் வேட்பாளர்களைக் குறிக்கும் இலக்கங்கள் மட்டுமே இருப்பதால் வெவ்வேறான மூன்று வேட்பாளர்களுக்கு மூன்றுக்கு மேற்படாத விருப்புக்களை அடையாளமிடும் போது நீங்கள் விரும்பும் வேட்பாளர்களை, அவர்களைக் குறிக்கும் இலக்கங்களால் அடையாளம் காண வேண்டியிருக்கும். உங்கள் வீடுகளில் கிடைக்கப்பெறும் மேற்கூறப்பட்ட அறிவித்தல் இவ்விவரங்கள் நீங்கள் அறிந்து பொருத்தமான இலக்கங்களை ஞாபகம் வைத்துக்கொள்ள உதவும். மேலும் நீங்கள் ஞாபகப்படுத்திக்கொள்ள வேண்டுமானால் இதே விவரங்களைக் கொண்ட வாக்கெடுப்பு அறிவித்தல் ஒன்று வாக்கெடுப்பு நிலையங்களில் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கும்.

05 நீங்கள் வாக்களிக்கச் செல்லும் போது தேசிய அடையாள அட்டையையாவது அதுவில்லாதவிடத்து வேறேதேனும் அடையாள அட்டையையாவது வைத்திருப்பது உங்கள் அடையாளத்துக்குச் சவால் விடுக்கப்படும் பொழுது அதனை நிரூபிப்பதற்கு பிரயோசனமாகும்.

06 வாக்குச் சீட்டொன்றில் வாக்கொன்று அடையாளமிடப்படாதவிடத்து ஏதும் வாக்குச் சீட்டு வலுவுடையதாகுமெனக் கருதப்படமாட்டாது எனவே முதலாவதாக நீங்கள் விரும்பும் கட்சியின் சுயேச்சைக் குழுச் சின்னத்துக்கு எதிரே வாக்கொன்றை அடையாளமிடுமாறு அறிவுறுத்தப்படுகின்றது. அதன் பிறகு நீங்கள் விரும்பினால் விருப்புக்களை அடையாளமிடலாம். நீங்கள் விரும்பும் வேட்பாளரின் அச்சிட்ட இலக்கத்திற்கு மேல் புள்ளடி ஒன்றை இடுவதால் விருப்பொன்றைத் தெரிவிக்கலாம். அத்தகைய விருப்புக்கள் மூன்றினை நீங்கள் அடையாளமிடலாம்.

07 வாக்களித்த பின் காலம் தாமதிக்காமல் அவ்விடத்தை விட்டு அகலுமாறும் வாக்கெடுப்பு நிலையத்திற்கு அருகே தங்கியிருப்பதைத் தவிர்க்குமாறும் அன்புடன் வேண்டப்படுகிறீர்கள் இது கடமையில் ஈடுபட்டிருக்கும் வாக்கெடுப்பு அலுவலர்களுக்கும் பொலிஸாருக்கும் உதவியாக இருக்கும்.

தயானந்த திசாநாயக்க.
தேர்தல்கள் ஆணையாளர்.
தேர்தல்கள் செயலகம்,
சரண மாவத்தை.

(சி/13305)

## சின்னஞ்சிறு விளம்பரம்

### மணமகன் தேவை

யாழ். நாடார் குடும்பம், றோமன் கத்தோலிக்க மதம், 1969 இல் பிறந்த பட்டதாரி ஆசிரியைக்கும் 1973 இல் பிறந்த பயிற்றப்பட்ட ஆசிரியைக்கும் ஸ்பொன்சர் மூலம் அழைக்கக்கூடிய வெளிநாட்டு மண மகன்கள் தேவை. சகல விவரங் களுடனும் தொடர்புகொள்க.மே/பா இல. 1113, உதயன். (79290)

### DISSERTATION BINDING

பல்கலைக்கழக மாணவர்களின் ஆய்வுக் கட்டுரைகள், பல்கலைக் கழக நடைமுறைகளுக்கு அமையக் கட்டிக் கொடுக்கப்படும். (இரு பிரதி கள் கட்டுவதற்கான கட்டணம் ரூபா 350/-). தொடர்பு: பாரதி, 430, காங் கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி. 3081. (C/13122)

### தவறிவிட்டது

நளாயினி பூலோகசேகரம் என்ப வருடைய அடையாள அட்டைகள், பல்கலைக்கழக மெடல் என்பவற்று டன் 2 பவுண் பெறுமதி உடைய Necklase(நெக்கிளஸ்)கூடிய பேர்ஸ் கொக்குவிலுக்கும் பல்கலைக்கழகத் துக்கும் இடையில் தவறவிடப்பட் டது. நெக்கிளஸ் தவிர்ந்த ஏனை யவை கிடைக்கப்பெற்றன. தயவு செய்து நெக்கிளஸ் தொடர்பான தகவல் தெரிந்தவர்கள் தொடர்பு: T.மகேந்திரன், 105/1, ராசாவின் தோட்ட றோட், யாழ்ப்பாணம். சன்மா னம்வழங்கப்படும். (79330)

### இதோ வெளிவந்து விட்டது

**2000ஆம் டிசம்பர் க.பொ.த. சாதாரணப் பரீட்சை (O/L) தோற்றும் மாணவர்களுக்கான**

ENGLISH MODEL PAPER

**விற்பனையாகின்றது.**

ஆசிரியர்:
K.அருந்தவராஜா B.Com.
மக்மிலன் புத்தகசாலை,
இல. 3, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(C/13319)

### தரம் 8,9,10 புலமைப்பரிசில் - 2001

புதிய பிரிவு
**ஆரம்பம்**
இன்று மாலை 3.00 மணி.

BOND

புலமைப்பரிசில் பரீட்சை
ஒவ்வொரு ஞாயிறு
காலை 9.00 மணி

திகழ்
கல்வி நிலையம்
இணுவில்
(c/13322)

### சாயி சமித்தியில் ஆன்மீக நிகழ்ச்சிகள்

யாழ்.பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவை நிலையத்தில் நாளைமறுதினம் வியாழக்கிழமை காலை 9 மணி தொடக்கம் ஆன் மீக நிகழ்சிகள் இடம்பெறும்.

ஓம்காரம், காயத்திரி ஜெபம், இலட்சார்சனை, பண்ணிசை, சொற் பொழிவு ஆகிய நிகழ்ச்சிகள் இடம் பெறும். நண்பகல் நாராயண சேவை யும் நடைபெறும். (ஐ)

### ஊழியர் வெற்றிடம்

யாழ்.மாநகர சபையில் உள்ள ஊழியர்களுக்கான வெற் றிடங்கள் உள்ளகப் பதவி உயர் வுகள் மூலம் நிரப்பப்படவுள்ளன. இதன்படி அங்கு சிற் றூழியர்க ளாகக் கடமையாற்றி வருகின் றவர்களுக்கான நேர்முகப் பரீட் சைகள் நடைபெற்றுள்ளன.(இ-10)

---

## வாழ்த்துகின்றோம்

யா/புலோலி கிழக்கு அ.த.க.பாடசாலையில் 5ம் தரப் புலமைப் பரீட்சையில் சித்தியடைந்த எமது அன்பு மகள் செல்வி **த. இந்துஜா 164 புள்ளிகள்** பெற ஊக்குவித்த அதிபர் ஆசிரியர்கள், வாணி கல்வி நிலையத்தின் நிர்வாகிகள், ஆசிரியர்கள் ஆகியோரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பெற்றோர்,
**பாக்கியநாதன் குடும்பம்**
**மல்லிகா அன்ரி** (ஆசிரியை)
(79325)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

சாவற்கட்டைச் சேர்ந்த
திரு. நடேசு செல்வச்சந்திரன் ஆசிரியர் அவர்கள்
யாழ்.பல்கலைக்கழகத்திலே
06-10-2000 அன்று **'இசைக்கலைமணி'** பட்டம்
பெற்றதையிட்டும் யாழ்ப்பாணத்தின் இளம்
இசையமைப்பாளராக இருப்பதையிட்டும்
பாராட்டுகின்றோம்.

பெற்றோர்கள்,
மாணவர்கள்.
(79320)

## வாழ்த்துகின்றோம்

யாழ்.பல்கலைக்கழகத்தில் 06-10-2000 அன்று
B.A. பட்டம் பெற்ற (கலைமாணி)
எமது அளவையியல் ஆசான்
*கணேசன் தர்மதேவா*
அவர்களை உளமார வாழ்த்துகின்றோம்.

கலைப்பிரிவு மாணவர்கள் (2000)
சயன்ஸ் அக்கடமி,
நெல்லியடி, கரவெட்டி.
(79321)

## மகிழ்ச்சிதரும் மகத்தான தீபாவளி மலிவுவிற்பனை

10-10-2000 முதல் 26-10-2000 வரை

- தரமான புடைவை வகைகள்
- மனதைக் கொள்ளைகொள்ளும் வர்ணங்கள்
- நவீன டிசைன்கள்

விசேட விலைக்கழிவு
வாடிக்கையாளருக்கு!

## லைடன் புடைவை அகம்

410, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(c/13317)

## வாழ்த்துக்கள்

### 'சீதன வீடு'

என்னும் சட்டநூலை வெளியிட்டு
புத்தக வெளியீட்டில் புதிய சாதனை படைத்த



சட்டத்தரணி
**திரு. சபா ரவீந்திரன்**
அவர்கள் அண்மையில் சமாதான நீதிவானாகவும்,
உத்தியோகப் பற்றற்ற நீதிவானாகவும் (J.P.U.M)
சத்தியப் பிரமாணம் செய்துகொண்டமை அறிந்து
பாராட்டி வாழ்த்துகின்றோம்.

டாக்டர் எஸ்.வேலும்மயிலும்
குடும்பம், அல்வாய்.
(c/13324)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கைதடி கலைவாணி வித்தியாசாலை மாணவன்
5ஆம் ஆண்டு (2000 ஆம் ஆண்டு) புலமைப்பரிசில் பரீட்சையில்
சித்தியடைந்த **நாகேந்திரம் பினோத்**
(140 புள்ளிகள்) அவர்களைப் பாராட்டி
வாழ்த்துகின்றோம்.
இதே பரீட்சையில் சித்தியடைந்த
கைதடி கலைவாணி வித்தியாசாலை மாணவி
செல்வி **சிவலிங்கம் ஜான்சி** (140 புள்ளிகள்)
அவர்களையும் வாழ்த்துகின்றோம்.

மகேந்திரன் குடும்பத்தினர்,
கைதடி மேற்கு.
துஷா மூக்குக்கண்ணாடி வழங்குபவர்கள்
544, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(c/13325)

## தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறு

யா/மட்டுவில் கமலாசனி வித்தியாலய சாவகச்சேரி
மாணவி செல்வி கணேஸ்வரன் சுரேஜா (152 புள்ளிகள்)
மாணவன் செல்வன் யோகநாதன் கார்த்திகேயன்(158 புள்ளிகள்)
பெற்றுச் சித்தியடைந்தமையைப் பாராட்டுகின்றோம்.
மாணவர்களை வழிப்படுத்தி நெறிப்படுத்திய அதிபர்
ஆசிரியர்களையும் பாராட்டுகின்றோம்.

பாடசாலைச் சமூகம்.
(79315)

## வாழ்த்துகின்றோம்

மனிதன் வளருகின்றான்..
அன்பினால், அறிவினால்..
பண்பினால், பணிவினால்
சமூக சேவையினால்.
இவ்வாறு இன்று உயர்ந்து நிற்கும் நிறை மனிதன்

லயன் வ. பரமசிவம் அவர்கள்

11.09.2000 அன்று யாழ்.மாவட்ட நீதிபதி உயர்திரு.பி. சுப்பிரமணியம் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம் செய்ததினையிட்டு வாழ்த்துகிறோம்.

ஸ்ரீ பாலகதிர்காம தேவஸ்தானம்
(79138)

## மூன்றாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு
28
-
02
-
1928



உதிர்வு
10
-
10
-
1997

அமரர்
அருள்மிகு அறிஞர்
**டி.ஜே.அம்பலவாணர்**
(C.S.I.யாழ்.ஆதீனம் - 2ஆம் பேராயர்)

"நற்செய்தியை அறிவிக்கவும்,
நல்வாழ்வைப் பலப்படுத்தவும்
நலம் தரும் செய்தியை உரைக்கவும்.....
'...உன் கடவுள் அரசாளுகிறார்'
என்று கூறவும், வருகிறவருடைய
மலரடிகள்.........
எத்துணை அழகாயிருக்கின்றன."
(ஏசாயா 52:7)

இவரின் பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

*Mission House,*
*Manipay.*
(79035)

# நலம் தரும் நடவடிக்கைகள்

உலக உளநல நாள் ஒக். 10

## 10. தொடர்ந்து வாழ்தல்



மோசமான நிலைமைகள் ஏற்படும் வேளையில், நாம் மாளாது தொடர்ந்து வாழ்தல் அவசியமாகின்றது. எம்மை வருத்தி மிதமிஞ்சிய சுமைகளை ஏற்கவேண்டியதில்லை.

சுவர் இருந்தால் தான் சித்திரம் வரையலாம்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி செல்லாச்சிப்பிள்ளை கனகசபை

அச்செழுவைப் பிறப்பிடமாகக் கொண்ட செல்லாச்சிப்பிள்ளை கனகசபை நேற்று (09-10-2000) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராமலிங்கம் கனகசபையின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற அம்பலவாணர் - ஆச்சிமுத்துவின் சிரேஷ்ட புத்திரியும், மனோன்மணி, இராசலட்சுமி, அருள்நேசவாசன், காலஞ்சென்ற இராசசேகரம் மற்றும் செல்வராசா, சரோஜினிதேவி, கோபாலகிருஷ்ணன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சண்முகநாதன், ஐயாத்துரை, புஸ்பராணி, மனோன்மணி, நகுலாதேவி, காலஞ்சென்ற முத்துச்சாமி மற்றும் மகேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும் மஹாலட்சுமி, பஞ்சலிங்கம்(லண்டன்), தியாகலிங்கம், சுந்தரலிங்கம்(ஜேர்மனி), அமிர்தலிங்கம், யோகலிங்கம் (எரிபொருள் நிலையம், கோப்பாய்) ஆகியோரின் அன்புத் தாயாரும், நடராசா, லலிதா (லண்டன்), பவானி (ஆசிரியை), யோகேஸ்வரி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும் கோபிகரன் (லண்டன்), தயாகரன், காலஞ்சென்ற சிவாகரன் மற்றும் நவகரன், கருணாகரன், சுசிகரன், மதுரா, சுமித்திரா, கசகரன், சத்திராஜ், தனுஷா, டினோசன் (லண்டன்), பஹ்சிகா(ஜேர்மன்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் சாந்தி, ரமணி, குருபரன், ஆகியோரின் பெரியதாயும் வளர்மதி அருந்ததி, செந்தூரன் ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (09-10-2000) திங்கட்கிழமை சங்கானை மயானத்தில் இடம்பெற்றது.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**- பிள்ளைகள்**

| | |
|---|---|
| *நிரந்தர முகவரி:-* | *தற்காலிக முகவரி:* |
| *பூதர் வளவு,* | *சீ.தனஞ்செயன்* |
| *அச்செழு,* | *(வெள்ளைத்தம்பி)* |
| *நீர்வேலி.* (79336) | *சிலம்புப் புளியடி, சங்கானை.* |

## ஐயாத்துரை துரைராஜா

**(அதிபர், நாவலர் மகாவித்தியாலயம்)**

நல்லூர் செட்டித்தெருவைப் பிறப்பிடமாகவும், ஐயனார் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை துரைராஜா நேற்று (09.10.2000) திங்கட்கிழமை மாலை அகால மரணமானார்.

இவர் கௌரியின் (வவா - இளைப்பாறிய ஆசிரியர், வைத்தீஸ்வரா வித்தியாலயம்) அன்புக் கணவரும், திவாகரன், சசிகரன் (மாணவர்கள், சென்.ஜோன்ஸ் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**

*496, கே.கே.எஸ். வீதி,*
*தட்டாதெரு,*
*யாழ்ப்பாணம்.*

**து.திவாகரன்** (மகன்)

(C/13331)

## ஊன்றுகோல் தயாரிக்க ஏற்பாடு

அரியாலை,ஒக்.10

யாழ்.போதனா வைத்தியசாலை நலன்புரிச் சங்கம் ஊன்றுகோல்களைத் தயாரித்து நோயாளர்களுக்கு வழங்கவுள்ளது.

ஊன்றுகோல்களைத் தயாரிப்பதற்கு நலன்புரிச்சங்கம் ஒரு லட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

ஒரு சோடி ஊன்றுகோல்களுக்கு நோயாளர்களிடம் இருந்து 500 ரூபா அறவிடப்படும் என்றும் -

ஊன்றுகோல்களை மீண்டும் திருப்பி ஒப்படைக்கும் பட்சத்தில் அவர்களுக்கு 400 ரூபா மீள வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் நோயாளர்கள் அதை உறுதிப்படுத்தும் கிராம சேவையாளர், பிரதேச செயலர் ஆகியோரின் சிபார்சுக் கடிதத்துடன் வந்தால் அவர்களுக்கு இலவசமாக ஊன்றுகோல்களை வழங்கவும் நலன்புரிச்சங்கம் தீர்மானித்துள்ளது.

(ஐ-17)

## விசாரணை ஒத்திவைப்பு

மட்டக்களப்பு,ஒக்.10

மட்டக்களப்பு மாவட்டத்தில் தேசிய ஐக்கிய முன்னணியினால் தாக்கல் செய்யப்பட்ட வேட்பாளர்கள் பட்டியலை நிராகரிக்கக் கோரி மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணையை நீதிமன்றம் ஒத்தி வைத்துள்ளது.

நேற்றைய நீதிமன்றில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது மேல்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் அசோகா டி சில்வா இந்தத் தீர்ப்பினை வழங்கினார்.

நீதி அரசரின் இந்தத் தீர்ப்பினை ஆட்சேபித்து அடுத்த மாதம் உயர் நீதிமன்றில் முறையீடு செய்யப் போவதாக மனுதாரரான ரெலோவின் மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளர் என்.இந்திரகுமார் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தாக்கல் செய்யப்பட்ட தேசிய ஐக்கிய முன்னணியின் முதன்மை வேட்பாளர் செ.இராசதுரை, எஸ்.அரியலேஸ்வரன் ஆகியோரின் கையொப்பங்கள் போலியாக இடப்பட்டுள்ளதாகவும் வேட்பாளர் பட்டியல் போலியாகத் தயாரிக்கப்பட்டது எனவும் மேல் முறையீட்டு நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது தெரிந்ததே.

(ஐ-8)

## போக்குவரத்து தடை

தேர்தல் ஒழுங்குகளின் பொருட்டு யாழ்.செயலகப் பகுதி மற்றும் யாழ். முதலாம் குறுக்குத் தெரு பகுதிகளில் உள்ள வீதிகள் நேற்றுக் காலை பொதுமக்களின் போக்குவரத்துக்கு தடைசெய்யப்பட்டிருந்தன.

இப்பகுதிகளில் பாவலில் நின்ற படையினர் குறிப்பிட்ட வீதியில் பயணம் செய்ய முடியாது என்று கூறி பொது மக்களை திருப்பி அனுப்பினர்.

யாழ்.நகரில் இருந்து முதலாம் குறுக்குத்தெரு வீதிக்குச் சென்றவர்கள் திருப்பிவிடப்பட்டதால் அவர்கள் முனீஸ்வரன் வீதி வழியாக தமது பயணத்தைத் தொடர்ந்தனர்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி கமலா கனகசிங்கம்

இல.02, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூரைச் சேர்ந்த திருமதி கமலா கனகசிங்கம் 06-10-2000 அன்று கண்டியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற P.கனகசிங்கத்தின் அன்பு மனைவியும் கிருஷ்ணி, அகிலன் ஆகியோரின் அருமைத்தாயாரும் சுதாகர், யசோதா ஆகியோரின் மாமியாரும் வைஷ்ணவி, பிரணவி ஆகியோரின் ஆசைப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இல.C-55, ஒகஸ்தா ஹில், பல்கலைக்கழக விடுதி, பெரதெனியா இல்லத்தில் 08-10-2000 அன்று நடைபெற்று கண்டி மகியாவ மயானத்தில் பூதவுடல் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

**தகவல்:**

(C/13315) **க.அகிலன்**

## திருமதி சிவகாந்தி புஸ்பராணி

கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட சி.புஸ்பராணி 08-10-2000 அன்று லண்டனில் காலமாகிவிட்டார்.

அன்னார் சிவகாந்தியின் (லண்டன்) அன்பு மனைவியும் சிந்துஜனின் (லண்டன்) தாயாரும் வடிவேல் - பவளம் தம்பதியினரின் மகளும் வ.ஞானப்பெருமாள் (லிகிதர்), வ.தவராசா (பிரதம லிகிதர், சுகாதாரத் திணைக்களம், வவுனியா) வ.விநாயகமூர்த்தி (கணனி விரிவுரையாளர், கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஞா.பதமாவதி, த.றெஜினா (விவசாயத் திணைக்களம், வவுனியா) ஆகியோரின் மைத்துனியும், ஞா.துஷ்யந்தி, ஞா.கௌஷயந்தி, த.டிலக்சன் ஆகியோரின் மாமியாருமாவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 12-10-2000 வியாழக்கிழமை அன்று லண்டனில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**

*கரவெட்டி மேற்கு.* (79319) **வ.ஞானப்பெருமாள்.**

## திருமதி குகஞானாம்பாள் சேனாதிராசா

வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும், கைதடி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி குகஞானாம்பாள் சேனாதிராசா ஞாயிற்றுக் கிழமை (08-10-2000) கொழும்பில் C32/G1, சொய்சாபுர, மொறட்டுவ (தொ.பே.இல-605778) என்ற முகவரியில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சேனாதிராசாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சிவஞானசம்பந்தர், நவமணி ஆகியோரின் மூத்த புதல்வியும், திருமதி கருணாகடாட்சி சிவசுப்பிரமணியம், காலஞ்சென்ற சதானந்தசிவம், சந்திரசேகரம், காலஞ்சென்ற சிவப்பிரகாசம், கந்தப்பசேகரம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், நித்தியானந்தம், ரதிதேவி, ஸ்ரீஸ்கந்தன், கலாதேவி, சியாமளாதேவி ஆகியோரின் பாசமிகு தாயாரும், கமலேஸ்வரி, காலஞ்சென்ற ஸ்ரீஸ்கந்தா, பகவதி, சண்முகானந்தன், பவளநாதன் ஆகியோரின் மாமியாரும், காலஞ்சென்ற காயத்திரி, சிவாகரன், அச்சுதை, நவதர்சன், நிதிலா, கஜலக்ஷி, கஜகரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் மகிந்தா மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, இன்று (10-10-2000) செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று, பூதவுடல் கல்கிசை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**

*பொற்பதி வீதி,*
*கொக்குவில் கிழக்கு,*
*கொக்குவில்.* (79323)

**சே.ஸ்ரீஸ்கந்தன்.** (மகன்)

## கந்தப்பிள்ளை சண்முகம்

புத்தூரைப் பிறப்பிடமாகவும், ஆவரங்காலை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தப்பிள்ளை சண்முகம் நேற்று (09-10-2000) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் சரஸ்வதியின் அன்புக் கணவரும், லோகநாயகி, லோகநாதன் (கனடா), லோகாம்பிகை (கனடா), லோகேஸ்வரி ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (10.10.2000) செவ்வாய்க் கிழமை நண்பகல் 12 மணிக்கு சிறுப்பிட்டியில் உள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக சிறுப்பிட்டி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**

*சிறுப்பிட்டி மத்தி,*
*சிறுப்பிட்டி.* (C/13328)

**அ.தில்லைநாதன்** (மைத்துனர்)

# அரசாங்க அறிவித்தல்

## நாடாளுமன்றத் தேர்தல் - 2000-10-10.

**இடம்பெயர்ந்த வாக்காளர்களுக்கு மாற்று வாக்கெடுப்பு நிலையங்களிலே வாக்களிக்கும் வசதி**

கொடிகாமம், வரணி, பச்சிலைப்பள்ளி ஆகிய பிரதேசங்களில் வசித்த இடம்பெயர்ந்த வாக்காளர்களின் வசதி கருதி அவர்களுக்காக முன்பு அமைக்கப்பட்ட வாக்கெடுப்பு நிலையத்தின் பெயரும் அவர்களின் பிரதேசமும் தற்பொழுது அவர்கள் சென்று வாக்களிக்க வேண்டிய மாற்று நிலையமும் கீழே காட்டப்பட்டுள்ளன.

அந்தந்தப் பிரதேச வாக்காளர் யாவரும் தற்பொழுது சென்று வாக்களிக்க வேண்டிய நிலையத்திலேயே வாக்களித்தல் வேண்டும். எனவே இவர்களுக்காக விசேட பிரயாண வசதிகள் 2000.10.10 ஆம் திகதியன்று என்னால் செய்து கொடுக்கப்படும்.

தெரிவத்தாட்சி அலுவலர்,
தேர்தல் மாவட்டம் இல.10 - யாழ்ப்பாணம்.

2000.10.06

**வாக்கெடுப்புப் பிரிவு "ஏ" - சாவகச்சேரி**

| வாக்கெடுப்பு மாவட்ட இல. | பிரதேசம் | முன்னைய வாக்கெடுப்பு நிலையம் | தற்பொழுது சென்று வாக்களிக்க வேண்டிய நிலையம் | பின்வரும் உத்தியோக பூர்வ வாக்காளர் அட்டைகளுக்குரியவர்கள் தொடக்கம் | வரை |
|---|---|---|---|---|---|
| 30 | கொடிகாமம், தவசிகுளம் | யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தி. | யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் | 01 | 2503 |
| 31 | விடத்தற்பளை, கெற்பெலி | யா/விடத்தற்பளை கமலாசனி வித்தி. | யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் | 01 | 1228 |
| 32 | பலாலி, கச்சாய் | யா/கச்சாய் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை | யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் | 01 | 1459 |
| 33 | வெள்ளாம் போக்கட்டி, அல்லாரை | யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தி. | யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் | 01 | 1321 |
| 34 | மிருசுவில் | யா/கொடிகாமம் அரசினர் தமிழ்க் கலவன் பாட. | யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் | 01 | 1575 |
| 35 | எழுதுமட்டுவாழ் வடக்கு | யா/எழுதுமட்டுவாழ் வடக்கு தமிழ் கலவன் பாட. | யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் | 01 | 668 |
| 37 | கரம்பகம் | யா/உசன் இராமநாதன் மகா வித்தியாலயம் | யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் | 01 | 378 |
| 38 | உசன் | யா/உசன் இராமநாதன் மகா வித்தியாலயம் | யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் | 01 | 681 |
| 39 | வரணி வடக்கு | யா/வரணி சைவப்பிரகாச வித்தியாலயம் | யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் | 01 | 1011 |
| 40 | இடைக்குறிச்சி, கரம்பைக்குறிச்சி | யா/கரம்பைக்குறிச்சி அரசினர் தமிழ்க்கலவன் பாட. | யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் | 01 | 952 |
| 41 | இடைக்குறிச்சி, கரம்பைக்குறிச்சி | யா/வரணி மகா வித்தியாலயம் | யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் | 01 | 635 |

(C/13279)

ஊழல் வழக்குகளில் நேற்றுத் தீர்ப்பு

# 6 ஆண்டுகள் தேர்தலில் போட்டியிடும் தகுதியை இழந்தார் ஜெயலலிதா!

## அவரது அரசியல் எதிர்காலம் சூனியமாகின்றது



சென்னை,ஒக்.10

'டான்சி' நிலபேர ஊழல் வழக்கில் மூன்றாண்டு கால கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டதை அடுத்து தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் அரசியல் எதிர்காலம் சூனியமாகி உள்ளது.

1992ஆம் ஆண்டு சிறு தொழில் நிறுவனமான டான்ஸி நிறுவனத்துக்குச் சொந்தமான 3.06 ஏக்கர் நிலத்தையும் அதில் இருந்த கட்டடங்களையும் ஜெயலலிதாவும் அவரது தோழியான சசிகலாவும் பங்குதாரர்களாக உள்ள ஜெயா பப்ளிகேசன், சசி என்ரப்பிறைசஸ் ஆகிய நிறுவனங்களுக்கு மிகவும் குறைந்த விலைக்கு - அடிமாட்டு விலைக்கு - விற்றதன் மூலம் தமிழக அரசுக்கு 3:5 கோடி ரூபா இழப்பை ஏற்படுத்தியதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட வழக்கிலேயே ஜெயலலிதாவுக்கும் அவரது தோழி சசிகலா உட்பட வேறு ஐவருக்கும் தலா 3 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது. நேற்று இடம்பெற்ற சிறப்பு நீதிமன்ற அமர்வின்போது சிறப்பு நீதிமன்ற நீதிபதி அன்பழகன் இந்தத் தீர்ப்பை வழங்கினார். இந்தத் தீர்ப்பின் மூலம் அடுத்த ஆறு ஆண்டுகளுக்கு தேர்தல்களில் போட்டியிடும் தகுதியை ஜெயலலிதா இழந்துள்ளார். இது அவரது அரசியல் எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கி உள்ளதாக அரசியல் அவதானிகள் குறிப்பிட்டுள்ளனர். இந்த ஊழல் தொடர்பாக ஜெயா பப்ளிகேஸன்ஸுக்கும், சசி என்ர பிறைஸஸ் நிறுவனத்துக்கும் எதிராகத் தனித்தனியே இரு வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருந்தன. இரு வழக்குகளிலும் ஜெயலலிதா உட்பட 6 பேர் மீதுமே குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

ஜெயா பப்ளிகேசன்ஸ் மீதான வழக்கில் இந்த ஆறு பேருக்கும் தலா 3 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. சசி என்ர பிறைஸஸ் மீதான வழக்கில் முன்னாள் அமைச்சர் முஹம்மது ஆஸிப்பை விடுவித்து ஏனைய ஐவருக்கும் தலா இரண்டு ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. ஆனால் இவ்விரு தண்டனைகளையும் குற்றவாளிகள் ஏக காலத்தில் அனுபவிக்கலாம் என்று நீதிபதி அன்பழகன் உத்தரவிட்டார். அத்துடன் உயர் நீதிமன்றில் மனுச்செய்ய வசதியாக இவர்களுக்கான தண்டனையை நவம்பர் 7ஆம் திகதிவரை நிறுத்தி வைத்ததுடன் அனைவரையும் பிணையில் செல்லவும் நீதிபதி அனுமதித்தார்.

ஜெயலலிதாவுக்கு எதிரான இந்த நீதிமன்றத் தீர்ப்பை அடுத்து தமிழகத்தில் பெரும் வன்செயல்கள் வெடிக்கும் அபாயம் ஏற்பட்டிருக்கிறது. பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பொலீஸார் பலப்படுத்தியுள்ளனர். வன்செயல்களில் ஈடுபட முயன்ற அ.தி.மு.க. ஆதரவாளர்கள் 750 பேர் நேற்று இரவு கைது செய்யப்பட்டனர். அடுத்த ஆண்டு தொடக்கத்தில் நடைபெறவுள்ள சட்டமன்றத் தேர்தல்களில் வென்று தனது அரசியல் எதிர்காலத்தை ஸ்திரப்படுத்திக் கொள்ளும் தீவிர நம்பிக்கையுடன் இருந்த ஜெயலலிதாவுக்கு இந்தத் தீர்ப்பு பெரும் அடியாக விழுந்திருக்கிறது. (முன்னர் வந்த செய்தி உள்ளே) (ஐ-8)

## பொதுத் தேர்தல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யப்பட்டுள்ளன. படையினரின் உதவியுடன் 35 ஆயிரத்துக்கும் அதிகமான பொலீஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடவுள்ளனர். கலவரம் அடக்கும் பொலீஸாரும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

தேர்தல் நீதியான முறையில் நடைபெறுவதை உறுதி செய்வதற்கு சாத்தியமான சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக தேர்தல் திணைக்களம் அறிவித்தது.

தேர்தலைக் கண்காணிக்கவென சுமார் 150 வெளிநாட்டு அவதானிகள் வருகை தந்துள்ளனர். அவர்களுடன் மதகுருமாரும் உள்நாட்டு அவதானிகளும் தேர்தலைக் கண்காணிக்கவுள்ளனர்.

தெற்கின் இரண்டு பிரதான கட்சிகளான ஆளும் கட்சிக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையிலேயே பலத்த போட்டி நிலவுகிறது. இவ்விரு கட்சிகளின் ஆதரவாளர்கள், வேட்பாளர்கள் சம்பந்தப்பட்ட வன்செயல்களே மிக அதிக அளவில் இடம்பெற்றிருப்பதாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. நேற்று நண்பகல் வரை 1500க்கும் அதிகமான தேர்தல் வன்செயல்கள் இடம்பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

மொத்தம் 58 பேர் பலியாகியுள்ளனர்.

இத்தேர்தலில் மூன்றாவது பெரிய சக்தியாக ஜே.வி.பி. விளங்குவதாக அவதானிகள் குறிப்பிடுகின்றனர்.

இம்முறை தேர்தல் முடிவுகள் தாமதமாகவே வெளியாகும் என்றும் முதலாவது உத்தியோக பூர்வ முடிவுகள் நாளை அதிகாலையிலேயே வெளியிடப்படும் என எதிர்பார்க்கப் படுவதாகவும் தேர்தல் திணைகள வட்டாரங்கள் தெரிவித்தன.

வாக்களிக்கச் செல்வோர் தமது தேசிய அடையாள அட்டைகளையும் எடுத்துச் செல்லுமாறு இலங்கை வானொலி மூலம் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ஐ-3-7-8)

## அத்தியாவசிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடைகளில் பெரும் எண்ணிக்கையானோர் குழுமி நின்றனர். அடுத்த சில தினங்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்களை வாங்குவதில் அவர்கள் ஈடுபட்டிருந்தனர்.

மண்ணெண்ணெய் வாங்குவதற்காக எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும் அதிக எண்ணிக்கையானோர் கூடி இருந்தனர். வாகனங்கள் நீண்ட வரிசையில் நின்று பெற்றோல் நிரப்புவதையும் காணமுடிந்தது.

தேர்தலுக்குப்பின் சுமுகமான நிலை தோன்ற கணிசமான நாள்கள் எடுக்கலாம் என்பது போன்ற அச்சம் பொதுமக்கள் மத்தியில் காணப் படுவதாக எமது கொழும்புச் செய்தியாளர் தெரிவித்தார். (ஐ-4)


**சிமெந்து விலை மாற்றம்**

டோக்கியோவில் சிமெந்து கம்பனியின்
சிமெந்து விலை ஏற்றத்தினால்
**மிற்சுயி, அட்லஸ்**
சிமெந்துகளின் விலைகளும் உயர்ந்துள்ளன என்பதை எமது வாடிக்கையாளர் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.
*புதிய விலை:-*
அட்லஸ் பக்கற் ஒன்று - 540/=
(200 பக்கற்றுகளுக்கு)
மிற்சுயி பக்கற் ஒன்று - 572/=
(200 பக்கற்றுகளுக்கு)
**ஜெசீரா ஏஜென்ஸி**
13, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P. 2407 (C/13265)


## வழமையான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த பஸ்கள் இடம்பெயர்ந்துள்ள மக்களை வாக்களிப்பு நிலையங்களுக்கு ஏற்றி இறக்கும் பணிகளில் ஈடுபடுத்தப்படும். அதில் ஏனைய பொது மக்களும் இலவசமாகப் பயணம் செய்ய முடியும். நாளை முதல் மீண்டும் பஸ்கள் வழமையான சேவையில் ஈடுபடும்.

இப்படி அவர் மேலும் தெரிவித்தார். (இ-9-ஒ)

## வீதியோர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருந்த ஜும்மா பள்ளிவாசல் பகுதியைச் சேர்ந்த ஏ.ஆர்.ஏ.ராபீக் (வயது 23), ஏ.சி.காதர் (வயது 30) மற்றும் நாவாந்துறையைச் சேர்ந்த முத்து கருணாநிதி (வயது 34), வெள்ளாந் தெருவைச் சேர்ந்த இரத்தினம் ஸ்ரீதரன் (வயது 23), புடைவைக் கடை ஒன்றின் ஊழியரான விஸ்வலிங்கம் ரஞ்சித் (வயது 22) ஆகியோரே பலத்த காயங்களுக்கு உள்ளான நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

பிந்திக் கிடைத்த தகவல்களின் பிரகாரம் காயமுற்றவர்களில் ஒருவரான வி.ரஞ்சித்தின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் நேற்று நள்ளிரவு தெரிவித்தன.

பொதி செய்யப்பட்ட புடைவைகளை ஏற்றிக் கொண்டு சென்ற - யாழ்.நகரில் உள்ள முஸ்லிம் வர்த்தகர் ஒருவருக்குச் சொந்தமான - லொறியே நாவலர் மகாவித்தியாலயச் சுவரில் மோதிய பின் குடை சாய்ந்தது. (ஐ-7)

## கிளாலிப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ள படையினரின் மூன்று காவலரண்களைக் கைப்பற்றினர் -

அதன் பின்னர் படையினர் மேற்கொண்ட பதில் தாக்குதலை அடுத்து அந்தக் காவலரண்கள் மீளக் கைப்பற்றப்பட்டன. அப்போது விடுதலைப் புலிகளுக்கு பலத்த சேதம் விளைவிக்கப்பட்டது. அவர்களின் மோட்டார் நிலைகள் மீது ஆட்லறித் தாக்குதல் நடத்தப்பட்டு அவை அழிக்கப்பட்டன -

கிளாலியில் நடைபெற்ற சண்டையில் விடுதலைப்புலிகளுக்கு ஏற்பட்ட சேதம் குறித்துத் தெரியவரவில்லை. அவர்களின் மோட்டார்த் தாக்குதல் இணைப்பாளர் முத்து கொல்லப்பட்டார் -

காலையில் ஆரம்பித்த இந்தச் சண்டையின் பின்னர் நண்பகல் 1.30 மணியளவில் படையினர் தமது நிலையை மீளக் கைப்பற்றிக் கொண்டனர். இந்தச் சண்டையில் 4 படையினர் உயிரிழந்தனர்; 42 படையினர் காயம் அடைந்தனர் - என்றுள்ளது. (ஐ-3)

## 421 நிலைய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுக் காலை யாழ்.மத்திய கல்லூரிப் பகுதியில் வைத்துத் தமக்கு ஒதுக்கப்பட்ட பஸ்களைப் பெற்றுக்கொண்ட இந்த அலுவலர்கள் யாழ்.செயலகத்துக்குச் சென்று தமக்குரிய ஆவணங்களைப் பொறுப்பேற்று அவற்றில் ஏற்றிச் சென்றனர்.

அலுவலர்களையும் ஆவணங்களையும் ஏற்றிய முதலாவது பஸ் காலை 10.50 மணியளவில் யாழ். செயலகத்தில் இருந்து புறப்பட்டது.

இந்தப் பணிகளுக்காக நேற்று 85 பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப் பட்டன.

யாழ்.மாவட்டத்தில் தேர்தல் கடமைகளுக்குத் தெரிவு செய்யப்பட்ட 421 சிரேஷ்ட தலைமை வகிக்கும் அலுவலர்களும் நேற்றுத் தமது கடமைகளையும் பொறுப்புக்களையும் ஏற்றுக் கொண்டனர்.

இந்த அலுவலர்கள் தங்களுக்கென ஒதுக்கப்பட்ட 195 இரவுத் தங்கல் நிலையங்களில் நேற்றிரவு தங்குவதற்கு ஏற்பாடாகி இருந்தது.

இன்று காலை 7 மணிக்கு முன்னதாக தங்களுக்குரிய வாக்களிப்பு நிலையங்களுக்குச் சென்று தமது கடமைகளை இவர்கள் ஆரம்பிப்பார்கள்.

வாக்களிப்பு காலை 7 மணி முதல் மாலை 4 மணிவரை சகல வாக்களிப்பு நிலையங்களிலும் நடைபெறும்.

மொத்தமாகவுள்ள 421 வாக்களிப்பு நிலையங்களிலும் 842 வாக்குப் பெட்டிகள் வைக்கப்படவுள்ளன.

இதேவேளை -

தென்மராட்சி, வடமராட்சி கிழக்கு, பச்சிலைப்பள்ளிப் பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்தவர்கள் கொத்தணி வாக்களிப்பு நிலையங்களில் தமது வாக்குகளை அளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இவர்களுக்கு யாழ்.தேர்தல் திணைக்களத்தினால் இலவச போக்குவரத்துச் சேவைகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. இந்தச் சேவையில் 35 பஸ்கள் ஈடுபடவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-5-9-ரி-173)

## புலிகள் ஐவர் உயிரிழப்பு

தென்மராட்சி கல்வயல் பகுதியில் நேற்றுமுன்தினம் படையினருடன் இடம்பெற்ற மோதல் சம்பவம் ஒன்றில் தமது தரப்பில் 5 பேர் உயிரிழந்ததாக விடுதலைப் புலிகள் தமது "புலிகளின் குரல்" வானொலி மூலம் அறிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர்களின் பெயர் விவரம் வருமாறு:-

செல்வன்(செபமாலை செபஸ்ரீன்- மன்னார்), மணிமாறன் (நேசரத்தினம் சசிதரன்-புதுக்குடியிருப்பு) செல்வி (இராஜரட்ணம் சுலோசனா-யாழ்ப்பாணம்), வான்முகில் (கஜேந்திரன் புவனேஸ்வரி - தர்மபுரம்) இளம்பிறை (பத்மயேசுபாலன் மரிஸ்ரலாவதி - முல்லைத்தீவு)

கனகம்புளியடிப்பகுதியில் நேற்று இடம்பெற்ற மோதல் சம்பவம் ஒன்றில் எல்லைப்படை வீரரான கந்தையா தங்கராஜா என்பவர் உயிரிழந்தார் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-7-165)

## வாக்களிப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டில் உள்ள சகல பொலீஸ் நிலையங்களுக்கும் அனுப்பிவைக்கப் பட்டுள்ளதாக பொலீஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

ஊரடங்கு அமுல் செய்யப்பட்டால் அவசர நோயாளிகள், விமான நிலையம் செல்வோர் உட்பட மிக அத்தியாவசிய தேவை உள்ளோருக்கு இந்த அனுமதிப்பத்திரங்கள் விநியோகிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-4-7-8)

## மதுபானங்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

நேற்றுமுன்தினம் மாலை 3 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதி மக்கள் இன்று மட்டக்களப்பு நகரில் அமைக்கப்பட்டுள்ள கொத்தணி வாக்களிப்பு நிலையங்களுக்கு வாக்களிக்க வருகைதரவுள்ளனர். (ஐ-7-21)


**அரசாங்க அறிவித்தல்**

**நாடாளுமன்றத் தேர்தல் - 2000**
**விசேட பஸ் சேவை வசதி**

இன்றைய "உதயன்" பத்திரிகையில் உள்ளே 7ஆம் பக்கத்தில் வெளியாகியுள்ள விசேட பஸ் சேவை தொடர்பான விளம்பரத்தில் கீழ்க் கண்ட விடயங்களையும் சேர்த்து வாசிக் கவும்.

**விசேட பேருந்து சேவை இலக்கங்கள்:-**
129, 130

**பாதை விவரம்:-**
யாழ்ப்பாணம், வேலணை, ஊர்காவற்றுறை.

**புறப்படும் நேரம்:-**
9மணி, 10மணி, 12மணி, 1மணி

மீண்டும் அதே பாதையில் சேவை இடம்பெறும்.

**உள்ளே பிரசுரமாகியுள்ள தீவக வாக்களிப்பு நிலையங்களுக்கான பஸ் சேவை அட்டவணை ரத்துச் செய்யப்பட்டு, மேற்கண்டவாறு மாற்றப்பட்டுள்ளது.**

★ வரணியில் இருந்து நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்துக்கு விசேட பஸ் சேவை நடத்தப்படும்.

**தெரிவத்தாட்சி அலுவலர்,**
*தேர்தல் மாவட்டம் இல. 10,*
*யாழ்ப்பாணம்.*
10-10-2000 (C/13330)



**மரண அறிவித்தல்**

**கனகசபை யோகேந்திரா**

கொழும்பைப் பிறப்பிடமாகக் கொண்ட கனகசபை யோகேந்திரா நேற்று (09-10-2000) திங்கட்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற F.D.M.கனகசபை திருமதி நல்லம்மா (கிறேஸ்) ஆகியோரின் அன்பு மகனும் உசன் மிருசுவிலைச் சேர்ந்த காலஞ்சென்ற பதஞ்சலி தம்பதிகளின் மருமகனும் திருமதி மகாஈஸ்வரியின் அன்புக்கணவரும், தனுஷா (சமீரா), கஜன்,நிருஷா ஆகியோரின் அன்புத் தந்தையும், அர்சாட்டின் அன்புப் பேரனும், சமீன்டீனின் மாமனாரும், காலஞ்சென்ற குலேந்திரன் மற்றும் ஜெகதீசன், விக்கினேஸ்வரன், ரவீந்திரன், மலர் ஆகியோரின் அன்புச்சகோதரனும் மகாலிங்கம், மகாராணி, மகாதேவி, மகாலட்சுமி, மகாரஞ்சிதம், மகாபாக்கியம், காலஞ்சென்ற மகேந்திரா, மகாருக்குமணி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (10-10-2000) செவ்வாய்க் கிழமை NO.7 KENSINGTON GARDEN பம்பலப்பிட்டியா (T.P-583486) இல்லத்தில் இருந்து 4 மணியளவில் கனத்தை மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*மக்ஷெல் கவுஸ்,*
*யாழ்ப்பாணம்,*
*T.P- 2008/ 2137)* (79327)

தகவல்:
மகாரஞ்சிதம் கனேசன்.
(மைத்துனர்)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 10.10.2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.